# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, மாசி 7உ (18—2—73) ஞாயிறு முஹற 14 | புத்தகம் 26 இதழ் 11


# நாடெங்கும் பயங்கர உணவு நெருக்கடி!

## மார்க்ஸீய சர்வாதிகாரத்துக்கு முதற்படி!

அடுத்த சில வாரங்களுக்குள் நாடு முழுவதும் பயங்கர உணவு நெருக்கடி ஒன்று ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

கூப்பனுக்குவழங்குவதற்கு ஒரு மாத கையிருப்பு அரிசி கூட அரசாங்கத்திடம் தற்போது இல்லையென்றும் இதனால் அரசு நெருக்கடியொன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. நிலைமையைச் சமாளிப்பதற்கு, அரிசி பங்கீட்டு முறை முற்றாக கைவிடப்படலாம் அல்லது கூப்பனுக்கு இரண்டாவது கொத்து அரிசி வழங்கப்படுவதை ரத்து செய்து, முதலாவது கொத்துக்கும் கட்டணம் அறவிடப்படலாம் என்று அரசாங்க வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

அரசாங்கத்திடம் தற்போது கையிருப்பில் உள்ள அரிசி ஆக 45,000 தொன் மட்டுமே யென்றும் ஒரு மாதத்துக்கு கூப்பனுக்கு வழங்குவதற்கு மட்டும் 65,000 தொன் அரிசி தேவைப்படும் என்றும், தற்போதுள்ள அரிசி ஒரு மாதத்துக்கும் போதாத தென்றும் வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாகவே கடந்த திங்கட்கிழமை அவசர அவசரமாக, அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் 'கஸெட்' உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி (1) அதிகாரம் பெருத வர்த்தகர் எவரும் அரிசியோ நெல்லோ விற்கக் கூடாது. (2) ஒருவர் உத்தரவு இல்லாமல் 2½ புசல் (160 இருத்தல்) அரிசி, அல்லது 5 புசல் (320 இருத்தல்) நெல்லுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது (3) குறிப்பிட்ட அளவுக்கு மேல் அரிசியையோ, நெல்லையோ ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்லக் கூடாது (4) உற்பத்தியாளர்கள் நெல்லை, நெற் சபைக்கே விற்க வேண்டும்.

இந்த கெஸெட் அறிவித்தலையடுத்து, பொலீசாரும இராணுவத்தினரும், கடற்படையினரும், சென்ற கிழமை முழுவதும், தனியார் கடைகளிலிருந்த அரிசி மூடைகளையும் லொறிகள், வான்கள், கார்களிலும் கொண்டு செல்லப்பட்ட அரிசியையும் கைப்பற்றும் வேலையில்டுபட்டிருந்தனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

வாழைச்சேனையில் குடியேறிய

## மலையகத் தமிழருக்கு மாபெரும் கொடுமை!

### பௌத்த பிக்குவின் சொற்படி பொலிசார் நடத்தும் அட்டூழியம்!

சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மலைநாட்டுத் தமிழர்களுக்கு, பாரபட்சம் காட்டி, கொடுமைக்குமேல் கொடுமை இழைத்து வருகிறது இலங்கை அரசு!

தேசிய மயமாக்கப்பட்ட தோட்டங்களிலிருந்து வெளியேற்றப் படும் இவர்கள், தமிழ் மக்களின் மரபு வழித் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சென்று குடியேறினல், அங்கும்

(7-ம் பக்கம் பார்க்க)

## 'எம். ஜி. ஆர் கடைச்சரக்கல்ல'

' திரு. எம். ஜீ. இராமச்சந்திரன், இலங்கை வாழ் தமிழரின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர். மான சீகமான முறையில் உலகத்தின் அனுதாபத்தை இலங்கைத் தமிழருக்காக திரட்ட அவர் ஆயத்தமாக இருக்கிறார்.

அத்தகையவரை காங்கேசன்துறை இடைத் தேர்தல்பிரசாரத்துக்கு தந்தை செல்வநாயகத்துக்கு எதிராக பயன்படுத்த சிலா முயல்கிறார்கள். இப்படியெல்லாம் பயன்பட அவர் கடைச் சரக்கல்ல என்பதையும் இங்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்—''

— நாவலர் அமிர்தலிங்கம் (யாழ் அண்ணு விழாவில்)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை அயல்நாட்டுப் பிரச்சினையல்ல'

### சென்னையில் ஹாண்டே முழக்கம்

'இலங்கைத் தமிழர் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் தீர்த்து வைக்கப்படவேண்டிய ஒரு பிரச்சினையாகும். இதில் இந்திய மத்திய அரசாங்கமும் பிரதமர் இந்திராகாந்தியும் உடனடியாகத் தலையிட்டு, அவசியமானல் ஐ. நா. மன்றத்திற்கும் எடுத்துச்சென்று துயர் துடைக்கும் ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும்''

—இவ்வாறு சுதந்திரகட்சி எம். எல். ஏ. டாக்டர் ஹாண்டே கூறினர்.

சென்னையில் நடைபெற்ற இலங்கை தமிழர் துக்கநாள் கூட்டத்தில் டாக்டர் ஹண்டே பேசினர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவை சார்பில் இக் கூட்டம் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெற்றது. கலாநிதி இரா. ஜனார்த்தனம் எம். ஏ. தலைமை வகித்தார்.

இலங்கை தி. மு. க. வின் முன்னுள் பொதுச்செயலாளர் மணவைத் தம்பி, குன்றக்குடி அடிகளார் ஆகியோர் பேசினர்.

#### 'காக்கும் பொறுப்புண்டு'

டாக்டர் ஹண்டே மேலும் கூறியதாவது;

இலங்கைத் தமிழர் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை. அது அயல் நாட்டுப் பிரச்சினை என்று விட்டு விடக் கூடாது. இலங்கை வாழ் தமிழர்களைக் காக்கும் பொறுப்பு இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் பிரதமர் இந்திராகாந்திக்கும் உண்டு.

(7ம் பக்கம் பார்க்க)

## தி. மு. கழகத்தின் இன்றைய நிலை என்ன?

''கிராமங்களில் ஓட்டு விடுகளை நாம் கட்டி இருக்கிறேம். அல்லது கீற்று வேய்கின்ற வீடுகளையும் நாம் கட்டுகிறேம். ஆனல் கீற்று வேய்வதாக இருந்தாலும் ஓடு மாற்றுவதாக இருந்தாலும் சட்டங்களை அடித்துத்தான் ஓடு மாற்றுகிறேம். அல்லது மூங்கில் பிளாச்சு என்று சொல்கிறேமே அவற்றைக் கட்டித்தான் மேலே கீற்றுகளைப் போடுகிறேம்.



இப்போது கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற நிலைமை நான்கைந்து கீற்றுக்கள் காற்றிலே பறந்து விட்டன. ஒரு பத்து இருபது ஓடுகள் கீழே விழுந்து விட்டன. மறுபடி அதே ஓடுகளை திரும்ப எடுத்து வைத்துக்கொள்ளலாம். அது ஒன்றுக்கும் உதவாமல் உடைந்து விட்டால் வேறு ஓடுகளை வைத்துக் கொள்ளலாம். ஆகவே சட்டப்பட்ட சட்டங்கள் அப்படியே இருக்கின்றன. குச்சிகள் அப்படியே இருக்கின்றன. கழகத்தின் கட்டுக்கோப்பு குலையவில்லை.

உண்மையிலேயே அந்தக்காரணத்தினலே தான் பத்திரிகைகளுடைய பலமான எதிர்ப்புப் பிரச்சாரத்துக்குப் பிறகும் இந்தியாவிலிருந்து வெளி வருகிற எல்லா பத்திரிகைகளும் சேர்ந்து கூட்டு முயற்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இனி அழிந்து விட்டது என்றெல்லாம் குரல் கொடுத்த பிறகும், இங்கே இருக்கின்ற சில பேர் போலிப் புகார் பட்டியலைத் தயாரித்த பிறகும் இங்கு கழகம் ஆடாமல் அசையாமல் இருக்கிறதென்றல் அதற்கு என்ன காரணம்?

நமக்கென்று சில புனிதமான கொள்கைகள் இருக்கின்றன. நாம் நமது உரிமைகளுக்காகப் போராடுகிறேம். நம்முடைய உயிரினுமினிய மொழிக்காக போராடிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றைக்கும் போராடுகின்ற குணத்தைப் பெற்றிருப்பவர்கள். சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுகிறேம். இந்தக் கொள்கைகளை திட்டங்களாக ஆக்கிக்கொண்டு இன்றைக்குப் பணியாற்றி வருகின்றேம்.''

— கழகத்தலைவர் கலைஞர் கருணநிதி.


தமிழ் நாவல் இலக்கியத்துறையில்

ஒரு புதுமை-ஒரு புரட்சி!

சிறந்த தமிழ் நாவல்களைத் தருவதில்
முன்னணியில் நிற்கும் சுதந்திரனில்
விரைவில் தொடங்குகிறது—புத்தம்புது சமூக நாவல்

'ராதையின் நெஞ்சம்'

புதுமை நிறைந்தது—உள்ளத்தை உருக்கும்
உணர்ச்சிமயமான சம்பவங்கள்—திடுக்கிடவைக்கும்
திருப்பங்கள் நிறைந்த ஓர் உண்மைக்காவியம்!

தமிழ் ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய கர்த்தா
படைக்கிறார்!

ஆரம்பமாகும் தேதி அடுத்த வாரம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தின் பொருள் வளத்தைப் பெருக்கி கலாசாரப் புரட்சியை நிறைவேற்ற முடியும்!

## சிக்கனமே இதற்கு வழி—செந்தமிழா கேள் இதை!

## ஆக்கத்துறையில் இறங்குவோம்! அன்னை பூமியை மீட்போம்!

சென்ற சில மாதங்களாக கொழும்பு புகையிர புறக்கோட்டை புகையிரத ஸ்தானத்தில் யாழ்ப்பாணம் போய்வரும் வண்டிகளை கவனித்தோம் ஏராளமான பிரயாணிகள் போய் வருவதை அவதானித்தோம் வண்டிகளில் உள்ள இடமெல்லாம் நிரம்பி பின் நட்டமரங்கள் போல் பலர் நடை பாதைகளில் நின்றார்கள். ஆர்வமுள்ள இளைஞர் கால்வைத்தேறும் படிகளில் இருந்து சென்றார்கள். தூக்கம் கூடினோர் நாற்காலிகளுக்குக் கீழே தினசரிகளை விரித்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். போசனச் சாலையில் போத்தல் போத்தலாய்க் குடித்துக் கொண்டிருந்தார்கள் பலர்.

இவ்வளவு பிரயாணிகளும் வருடா வருடம் எவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்று சிறு கணக்கொன்றைப் போட்டுப் பார்த்தோம். அது பின் வருமாறு.

உறங்கிப்போகும் வண்டி 65 இடம் 15 ரூபா வீதப்படி ரூ. 975.

2ம் வகுப்பு 140 இடம் 20 ரூபா வீதப்படி ரூ 2800.

3ம் வகுப்பு 400 இடம் 10 ரூபா வீதப்படி ரூ. 4000.

ஆகமொத்தம் ரூ. 7775.

நாளுக்கு மூன்று கோச்சிகள் போவதையும் மூன்று கோச்சிகள் வருவதையும் கண்டோம். ஆகையால் வருடம் ஒன்றுக்கு,

7775x6x365=17,072,250.

இவ்வண்டிகளில் போய் வரும் பிரயாணிகளில் சிலர் கட்டாயம் போய் வரவேண்டியவர்கள். ஒரு சிலர் உல்லாசப் பிரயாணிக்காரர். வருடத்துக்கு மூன்றில் ஒரு பங்கு பயணத்தைக் குறைத்து அதனால் வரும் பணத்தை ஆக்கமுறையில் செலவிட்டால் என்ன வரும் என்று இன்னுமொரு சிறு கணக்கைப் போட்டோம்.

ஐயாயிரம் ரூபாவில் மூன்று ஏககர் தோட்டம் அமைக்க முடியும்என்பது எம் அனுபவத்தில் அறிந்த உண்மை. கிணறொன்று வெட்டி சிறு குடிசைகட்டி வண்டிலும் கலப்பையும் மாடும் எடுத்து ஏததுக்கிடாரம் கட்டி அழகானதோட்டம் செய்பவர்கள் பலரை நாம் அறிவோம்.

மூன்று ஏக்கரில் ஒரு ஏக்கரில் நாற்று நட்டு நல்லாய் இறைத்து 60-80 புசல் நெல் விளைவிக்க முடியும். இது ஒரு குடும்பத்துக்கு தாராளமாய் வருடம் பூராகவும் போதும்.

ஒரு ஏக்கரில் 5,000 மிளகாய்க் கன்று செய்து குறைந்த பட்சம் 10,000 ரூபாய் பலனடையலாம் $\frac{1}{3}$ ஏக்கரில் வெண்காயம் செய்து ரூபாய் 2,000 எடுக்க முடியும். $\frac{1}{2}$ ஏக்கரில் காய்கறி பழவகை செய்தும் ஆடு, யாடு, கோழி தேனீ வளர்த்தும் வருடம் முழுதும் பாலும் பழமும் பாகும் தெளிதேனும் உண்டு நோயற்று வாழலாம் வருடத்துக்கு ரூபாய் 10,000 சேமிக்கவும் முடியும்.

ஐந்து வருடங்களுக்குத் திட்டமிட்டு வருவாயை மீண்டும் ஆக்கத்தில் போட்டு வந்தால் கீழ்க் கண்டவாறு பொருளாதார வளர்ச்சியை அடையலாம்.

| வருடம் | | 1. | 2. | 3. | 4 | 5. | |
|---|---|---|---|---|---|---|---|
| 1,000 | தோட்டம் | 1. | 1. | 1. | 1. | 1. | கோடி |
| 3,000 | ,, | — | 3. | 3. | 3. | 3. | ,, |
| 7,000 | ,, | — | — | 7. | 7. | 7. | ,, |
| 15,000 | ,, | — | — | — | 15. | 15. | ,, |
| 40,000 | ,, | — | — | — | — | 40. | ,, |
| 66,000 | | | | | | | |

முதல் வருடத்தில் வரும் லாபத்தை (தடிப்பான எண்கள்) 5,000,000 உடன் சேர்த்து — அடுத்து வரும் வருடத்தின் செலவிட்டால் ஐந்து வருடக் கடைசியில் 87 கோடி ரூபாவும் 66,000 தோட்டங்களும் நம் இனத்துக்குச் சொந்தமாகும்.

இவையாவையும் தொடக்கிவிட்டது பயணச் சிக்கனத்தால் எடுத்த ரூபாய் 5,000,000.

இதே போன்று நகைக் கடைகள், பிடவைக் கடைகள், சாராய, கள்ளுத் தவறணைகள், படமாளிகைகள் யாவிலும் மூன்றில் ஒன்று வீதம் சிக்கன செலவை ஏற்படுத்தினால் ஐந்து வருடங்களில் ஆக்கபூர்வமான துறைகளில் எம்மினத்தவரின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்தி மாபெரும் கலாச்சார புரட்சியை நிறைவேற்ற முடியும்.

பத்து வருடங்களுக்குள் நமக்கு வேண்டிய பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், கோவில் குளங்கள் யாவும் கட்டி நம் நகரமெல்லாம் காவிரிப்பூம் பட்டினம் போல் சிலம்பொலிக்க வைக்க முடியும்.

இவ்வாக்கத்துறையில் எம்மினம் இறங்குமா? சிக்கன வாழ்வைக் கையாண்டு ஆக்கத்துறையில் ஈடுபட விரும்புவோர் இப்பத்திரிகை மூலம் 'உழவனுடன்' தொடர்பு கொள்ளவும்.

—'உழவன்'

### தமிழர் கூட்டணிக்கிளை நிருவாகிகள்

தமிழர் கூட்டணியின் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற 17ம் வட்டாரக்கிளைத் தலைவராக என்ஜினியர் திரு. இ. வைத்தியலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற மேற்படிகிளையின் நிர்வாகிகள் தேர்தலின் போது உபதலைவரர்க திரு. என். ரி செல்வத்துரை எம். எம். சி.யும் காரியதரிசியாக திரு. கா. தியாகராசாவும், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள்: செ. சுந்தரலிங்கம், என் சின்னத்துரை, எஸ். தியாகராஜா, எஸ். சுந்தரலிங்கம், நா. கந்தசாமி, புரக்டர் தா. சங்கரப்பிள்ளை, என். சுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன் சிறையில் இன்று 254-வது நாள்




'இலக்கிய உலகு' எங்கே? அதை எழுதும் 'வேதாளம்' எங்கே? என்று சுதந்திரன் ஆசிரியரை நோக்கி சில இலக்கியப் பிரியர்கள் கேள்விக் கணைகளை தொடுத்துள்ளனர்.

வேதாளமாகிய அடியேன் எங்கும் போய்விடவில்லை. இலக்கிய உலகில் நடைபெறும் திருட்டுத்தனங்களையும், ஏமாற்று வித்தைகளையும் கண்டு, அந்த உலகத்தை விட்டே ஒதுங்கிவிடலாமா என்று சில சமயங்களில் நான் எண்ணுவதுண்டு.

ஆனாலும் அதே வேளையில் அப்படிச் செய்வது சமுதாயத்துரோகமாகும் — இலக்கிய உலகைப் புனிதப்படுத்துவது எனது கடமை — என்றும் எண்ணுகிறேன்.

எனவே 'இலக்கிய உலகு' இனி அடிக்கடி சுதந்திரனில் இடம்பெறும். இலக்கிய ரஸிகர்கள், ஆங்காங்கே நடைபெறும் இலக்கிய சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் திரைமறைவில் நடைபெறும் இலக்கிய உலக சுற்றுமாற்றுச் சம்பவங்களையும் இப்பகுதிக்கு அனுப்பிவைப்பார்களாக.

●

நாவலர் பெருமானைச் சாதிவெறியன், பிற்போக்குவாதி என்றெல்லாம் வாயில்வந்தபடி அர்ச்சித்துத் திரிந்த கம்யூனிஸ்டுகள் அண்மைக்காலமாக நாவலர் பெயரைச் சொல்லி 'பிழைப்பு' நடத்தி வருவதை நாடறியும்.

அடுத்தவன், சாதனையைத் தமது சாதனையென்று வாய் கூசாது கூறிக்கொள்வதில் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்ளும் இந்தக் கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் பலே கைகாரப் பேர்வழிகள். "எஸ். பொ" எழுதிக்கொடுக்க அதை தமது பெயரில் போட்டு, தமது படைப்புக்கள் அவை என்று கூறி பீற்றிக்கொண்டு திரிந்த பாதுகைத் திருடர் கூட்டமல்லவா இந்தக் கம்யூனிஸ்ட் குஞ்சுகள்?

இதே போலவே தான் நாவலர் பெருமானைத்தேசிய வீரர் என்று நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் யாரோ இருக்க தாமே நாவலரைத் தேசியவீரர் ஆக்கியதாக வெற்றிவீரம் பேசப் புறப்பட்டு இருக்கிறார்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்.

இப்பொதுவுடமைக்குஞ்சுகள். 1965ம் ஆண்டுக்குமுன் ஆறுமுகநாவலர், தொண்டுகள், பெருமைகள் ஆற்றல்கள் பற்றி ஏதும் கருத்துக்களோ, கட்டுரைகளோ வெளியிட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் 1965ல் அரசாங்க ஊழியர்கள் சிலர் கூடி, ஆறுமுகநாவலருக்கு தேசிய முறையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் விழா எடுத்ததும், மாண்புமிகு மகா தேசாதிபதியவர்களைப் பங்குபற்றச் செய்ததையும் கண்டதும்தான் இப்பொதுவுடமைக் குஞ்சுகள் தாங்கள்தான் நாவலரைத் தேசிய வீரராக்கியதெனக் கருத்துக்கள் வெளியிடத் தொடங்கினர்.

ஆனால் நடந்தது இதுதான் 14-12-65ல் வெளிவந்த "ஈழநாடு" இதழில் 'நாவலர் தேசிய வீரர்' என்ற கட்டுரையை முதன் முதலில் எழுதிய பெருமை பொதுவுடமைக் குஞ்சுகளுக்குரியதல்ல.

மேலும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஏடான 'எழுச்சி' 1966 நவம்பர் டிசம்பரில் வெளிவந்த இதழும் இதையேவலியுறுத்தின. இதைவிட 21-1-69ல் 'வீரகேசரி'யில் 'நல்லூரும் நாவலர் சிலையின் வரலாறும்' என்ற கட்டுரைகளும், நடைமுறைத் தமிழியக்கமுமே நாவலரைத் தேசிய வீரராக்குவதற்கு விசுவாசமான நடவடிக்கைகளையெடுத்தன இதுவே உண்மையாகும்.

●

அண்மையில் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் ஓர் அரிய, இனிப்பான கருத்தை தெரிவித்திருந்தார். அதுதான் எழுத்தாளர்களுக்கு பென்சன் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையாகும்.

நல்ல கோரிக்கைதான். ஆனால் இந்நாட்டில் அது ஏற்றுக்கொள்ளப்படுமா? ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் பாரபட்சமின்றிப் பின்பற்றப்படுமா என்பது கேள்விக்குரிய விடயங்களே.

இந்நாட்டில் சோசலிசத்தைப் பற்றியும், கம்யூனிசத்தைப் பற்றியும், அல்லது குமாரசூரியரைப்பற்றியாவது எழுதுபவன்தான் எழுத்தாளன் என்று அரசாங்கத்தால் கணிக்கப்படுவான்.

இரசிகமணியைப் போல சுதந்திரமாக, சுயேச்சையாக எழுதுபவனை தமிழுணர்வுக் கட்டுரைகளை, நூற்களை எழுதுபவனை இந்த அரசு எழுத்தாளன் என்று மதிக்காதே!

இரசிகமணியின் கோரிக்கைப்படி பென்சன் வழங்கும் திட்டம் வந்தாலும், அதிலும் பாரபட்சம் கடைப்பிடிக்கப்பட்டு, சுதந்திரமான எழுத்தாளன் ஒதுக்கப்படுவது நிச்சயம். எங்கள் இரசிகமணியையே ஒதுக்கிவிடுவார்களே!

### மொழியுணர்வு மிக்க மூதூரின் புதல்வர்

பிறக்கும் மனிதன் இறக்கவேண்டியது உலக நியதி. இறந்த காலத்தும் அவன் உலக மக்களால் போற்றிப் புகழப்படுகிறான் என்றால் அவன் நாட்டிற்கு நாட்டு மக்களுக்கு சமூகத்துக்கு சமுதாயத்திற்கு ஆற்றிய நற் தொண்டே காரணமாகும்.

இந்த வரிசையில் வைத்து மதிக்கப்படவேண்டியவர் தான் "ஆலிம்" ஐயா, என ஊர்மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட மௌலவி ஜனாப் எம். ஐ. எம். மஹீர் ஆலிம் ஆவார். மூதூர் புனித அந்தோனியார் கல்விக்கூடத்தில் அரபு ஆசிரியராக கல்வி போதித்துக்கொண்டிருந்தவர். ஆசிரியத்தொழில் இவரால் ஏற்றமடைந்ததா? அல்லது இவரால் ஆசிரியத் தொழில் புனிதத் தன்மை அடைந்ததா என்பது கூற முடியாதவாறு ஒன்றுடன் ஒன்று இறுக்கி இணைந்துள்ளன.

ஆத்மீகத் துறையா? அரசியலா—மேடைப் பேச்சா—பாட்டு எழுதவேண்டுமா — அதை புனைய வேண்டுமா எத்துறையும் அவரிடம் நளினமாடும்- சிலர் சிலவற்றில்தான் மிளிர்ந்து ஒளிவிடுவார். ஆனால் ஆலிம் ஐயாவோ எல்லாத்துறையிலும் வல்லவராய் விளங்கினார். அன்னாரிடம் அரசியல் பாடம் பெற்றோர் பலர் அவர்களில் நானும் ஒருவன்.

சந்தர்ப்ப வசத்தால் கொள்கைகளை மாற்றிக் குடை பிடிப்போர் பலரை மூதூர் அரசியல் சரித்திரத்தில் கண்டுள்ளேன். ஆனால் தமிழரசுக்கட்சியின் 1956ம் ஆண்டு பாதயாத்திரையிலிருந்து நேற்றுவரை கட்சியின் உண்மை ஊழியனாக—தொண்டனாக—பிரச்சார பீரங்கியாக விளங்கியவர் மஹீர் ஆலிம் ஐயா அவர்கள்.

மட்டுநகர் மாநில மாநாட்டில்; 'நாம் கோருவது பிளவுபட்ட இலங்கையுமல்ல கூறு போடப்பட்ட ஈழமுமல்ல, சகின மக்கள் இணைந்துவாழ்கின்ற இணைப்பாட்சியே! என அறை கூவியது இன்னும் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனத்தில் சமயச்சொற்பொழிவாற்ற சென்றபோது மாரடைப்பால் காலமாகி விட்டார் என்ற செய்தி 7-1-73 காலை 9-30 மணியளவில் மூதூர் வந்ததும் ஊரே அழுதது. எழு பிள்ளைகளின் தந்தையான ஆலிம் ஐயா அவர்கள் அருமை மனைவியையும் அருமைச் செல்வங்களையும் பரிதவிக்க விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டார்.

தமிழரசுக் கட்சி ஒரு தவப் புதல்வனை இழந்து விட்டது. முஸ்லிம் சமுதாயம் ஓர் ஆத்மீக வல்லுனனை இழந்து விட்டது. எழுத்தாளர் உலகம் ஒரு சிறுகதை மன்னனை இழந்துவிட்டது. கவிஞர் உலகம் சிறந்த கவி மன்னனை இழந்து விட்டது. அவர் ஆத்மா சாந்தியடைவதாக. அவர் பிரிவால் துயருறும் அன்னார் குடும்பத்தார்க்கு சுதந்திரன் மூலம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

வைத்தியக்கலாநிதி அ. அன்ரனி
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரசபை கலைப்பு — புனித நகரில் புல்லர்கள்!

# திருக்கோணமலையில் தருக்கரின் ஆட்சி!

திருக்கோணமலை நகர சபை கலைக்கப்பட்டுவிட்டது இப்படிக் கூறுவதை விட, திருக்கோணமலையில் தருக்கர்கள் ஆட்சிக்கு வித்திடப்பட்டுள்ளது எனக் கூறுவதே மேல். இப்படிக்கூற நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை.

செந்தமிழன் சித்தம்பலம் ஆண்ட செந்தமிழர் செழும் பூமியான அனுராதபுரத்தைச் சிங்களவர் சூழ்ச்சி செய்து — தமிழர்களைக் குறைத்தும் தங்களை நிறைத்தும் கைப்பற்றியதைப் போல—வவுனியா என்கிற ஈழத்தமிழகத்தில் பதவியா என்கிற பயங்கரக் குடியேற்றத்தை ஏற்படுத்தி வன்னி நாட்டையும் அடிமைப்படுத்தத் திட்டம் தீட்டியிருப்பதைப்போல—நமது தமிழர்கள் வாழ்கின்ற மூதூரில் சிங்களவரைக் குடியேற்றி அங்கும் ஊடுருவல் செய்வதைப போல — மட்டக்களப்பில் அம்பாறை என்கின்ற திட்டத்தின் நடுவே அழிவாரைக் கொண்டு குடியேற்றுவதைப்போல—கந்தளாயில் காடையரைக் குடியேற்றுவதைப்போல — எங்கள் புனித மண்ணிலும் நகர சபையில் சிங்கக் கொடியேற்றம் நடைபெறுகின்றது.

அடக்குமுறையால் துடுக்குத்தனமாக ஆட்சிபுரியும் இந்த முடக்குத்தனமான அரசாங்கத்தைப் பார்க்கிலும் எங்கள் நகர சபை ஆட்சி கோடி மடங்கு திறமையாக நடந்தது என்பதை மறுக்க முடியாது.

ஈழத்தமிழகத்தின் தலைநகராக முடிசூட்டப் போகும் திருக்கோணமலையில் ஈனத்தனமாகவும் பேடித்தனமாகவும் நடந்திருக்கின்றது இன்றைய ஆச்சியின் ஆட்சி. வேண்டுமானால் தலைவரைப் பதவி நீக்கம் செய்து வேறு தலைவரை அமர்த்தி குறையை நிவர்த்தி செய்திருக்கலாமே தவிர, கைப்பற்றியிருக்கக் கூடாது. இது சர்வாதிகாரத்தின் உச்சக் கட்டமாகும். ஒருசில உள்ளூர் எட்டப்பர்களாலும்— பதவி விரும்பிகளாலும நமது நகர சபை சீர்குலைக்கப்பட்டுவிட்டது.

இந்த விடயத்தில் பொதுமக்களையும் கண்டித்தாக வேண்டும். அரசாங்க ஆணையாளர் வந்துவிட்டவுடன் வரிசையில் நின்று பணம் செலுத்தும் பொதுமக்கள் அன்று இப்படிச் செய்திருந்தால் என்ன? இன்று திட்டித் திட்டிக் கட்டுகின்ற அதே வரியிறுப்பாளர்கள் அன்று ஒத்துழைக்கவில்லையே. பொதுமக்களின் மகோன்னதமான ஆதரவுடன் பதவிக்குவந்த இந்த நகர சபையை பொதுமக்களே பறி கொடுத்து விட்டார்கள். என்பதே சரி.

### கறுத்தக்கொடி

திருக்கோணமலையை எவ்வாறேனும் கைப்பற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த சிங்கள வெறியும், பௌத்த

**-எஸ். வில்வராஜன்-**

வெறியும் பிடித்த ஆட்சிக்குக் கறுத்தக் கொடியேற்றியது சாக்காகப் போய்விட்டது.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக ரீதியாக எதையும் செய்யமுடியும். பயங்கரவாதிகளைப்போல் நாங்களென்ன ஆயுதம் பாவித்தோமா? இல்லையே! கறுத்தக்கொடியும் ஏற்றுவோம், சிவத்தக் கொடியும் ஏற்றுவோம். பிறந்திறுத்[illegible] ன்டையும் கலந்து ஏற்ற எங்களுக்கு பூரண உரிமையுண்டு இதை ஆச்சியின் ஆட்சி உணரவேண்டும்.

பைந்தமிழர் பரம்பரை பரம்பரையாக வாழ்கின்ற மண்ணில் — தமிழர்களைச் சிறுகச் சிறுகக் கைப்பற்றி இங்கு ஒரு சிங்களவரை — அதுவும் ஒரு பௌத்தரை அங்கத்துவம்பெறச் செய்ய வேண்டும் என்பதில் சிங்கள ஆட்சி அதிக அக்கறை காட்டுகின்றதைத் திருக்கோணமலை மக்கள் உணர்ந்து விழித்தெழுந்து செயல்புரிய வேண்டிய காலம் அண்மித்து விட்டது.

இப்போது ஏற்றியிருக்கும் தேசியக் கொடியைப் பொறுத்த அளவில் அதை நாங்கள் கறுத்தக் கொடியாகவே மதிக்கின்ளும். ஆயுதம் ஏந்தி அகம்பாவம் கொண்டு ஆணவம் பிடித்த லையும் இந்த ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெள முடியாத வெறுங்கையராக வாழ்வதால் நமக்கு இக்கதி ஏற்பட்டுவிட்டது. இது நமது தலைவிதி. இதைத் திருக்கோணமலை மக்கள் கர்ண கடூரமாக எதிர்த்துக் கிளர்ச்சி புரிந்தாக வேண்டியது மிகமிக அவசியமும் அவசரமும் ஆகும்.

"கமிஷனர் வந்துவிட்டார்" இது குட் நியூஸ் என்று வலிந்து சொல்லித் திரிந்து கொண்டிருக்கும் விஷமிகளைத் திருக்கோணமலை மக்கள் கண்காணிக்கத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

முதனாம் வட்டார உறுப்பினர் விஜயநாதனைப் பொறுத்தமட்டில் அவர் மாபெரும் தவறு செய்துள்ளார். ஏன் இன்னும் திருக்கோணமலையைக் கைப்பற்ற வில்லை? என அரசாங்கத்திடம் காவடியெடுக்கும் அளவுக்கு அவர் நடந்துகொண்டது மடைத்தனமாகும். தான் தலைவராக வரவே முடியாது என்கிற ஒரே காரணத்தாலும் — தம்பிஜயா மீது கொண்ட தனிப்பட்ட பொறாமை காரணமாகவும் தனது சிற்றத்தை இந்த அளவுக்கு வளர்த்துக்கொண்ட விஜயநாதன் மாபெரும் குற்றவாளியாவார்.

படித்த மனிதனுசவும் — பெரிய மனிதனுசவும் கருதப்பட்ட விஜயநாதனுடைய செயலைத் திருக்கோணமலைச் சரித்திரம் என்றும் மறக்காது.

நகரசபையை வெகுவிரைவில் ஒப்படைக்குமாறு நாம் போராடக் களம் அமைத்தாகவேண்டும். ஒரு சலசலப்பையும் காணவில்லையே என மகிழ்ந்திருக்கும் சிங்கள ஏகாதபத்திய வாதிகளின் கைக்கூலிகளுக்கு நாம் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். ஆரியதாசாவுடைய பேச்சுக்கும் சோமபாலாக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் மத்தியில் நமது நகரசபை எடுபடக்கூடாது. பரம்பரை பரம்பரையாகத் தமிழர் தனிக்கொடி நாட்டிவரும் உலகேயறிந்த திருக்கோணமலையைப் பறி கொடுக்க நாம் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம். வெஞ்சிறையென்ன? நஞ்சையே பருகினலும் பருகுவோமேதவிர இந்தப் புண்ணிய பூமியை அந்நியரிடம் விற்று விடமாட்டோம்.

(7-ம் பக்கம் பார்க்க)

# இனமாற்றத்துக்கு முதற்படியே மதமாற்றம்!

## பௌத்தமத பிரச்சாரத்தில்

## மலையகத் தமிழரே! மயங்கிடாதீர்!

இலங்கை சுதந்திரம் அடைந்திட்ட கால முதல் சிங்கள ஆட்சிகள் தமிழினத்தையே படிப்படியாக தாழ்த்தி ஒழித்திடத் திட்டங்கள் வகுத்த வண்ணமாக இருந்து வருகின்றன. இந்தச் சதித்திட்டங்களுக்கு தாளம் போட்டு வயிறு வளர்க்கும் துரோகிகளும் ஆட்சிகு ஆட்சி தமிழினத்தில் தலையெடுத்து வருகிறார்கள்.

அரசாங்கத்தார் இம் என்றல் போதும், இதோ சரணங் கச்சாமி என்று பாதம் பணியும் துரோகிகளுக்குத் தம்மைத் தாம் மானமுள்ளவர்களாகக் காத்திடத் தெரியாதபோது மற்றவர்களையும் மானமிழந்த — மதியிழந்த—மதிப்பிழந்த தமிழர்களாக வாழ்வித்திட வேண்டும், அதனல் அரசாங்கத்தின் ஆதரவும் வயிற்றுப் பிழைப்புக்கு வழியும் கிடைத்திடும் என்ற நற்பாசை இந்தத் துரோகிகளுக்கு சிவநாடி.

### சூழ்ச்சி

தமிழினத்தை அடிமைகளாக்கிடும் சூழ்ச்சி சுதந்திரம் கிடைத்தபோதே திட்டப்பட்டது. மலையகத்தவர்கள் பிறப்புரிமை பறித்திடப்பட்டது. இப்படியே காலத்திற்குக் காலம் பல சீவாதார உரிமைகளை ஒவ்வொரு அரசாங்கமும் ஒடுக்கியது. ஈற்றில் நாடற்றவர்களாக்கியது.

நாடற்ற தமிழர்களை நாடு கடத்திடும் சட்டங்கள் வந்தன. அதன்பின் ஒப்பந்தங்கள் உருவாகின ஒப்பந்தங்களைச் சரியாக அமுல் நடாத்தாமலே மலையகத் தமிழர்களை நாடு கடத்திடத் திட்டங்கள் உருவாகின. இப்போது எஞ்சியுள்ள எட்டு இலட்சம் தமிழர்களையும் இனமாற்றம் செய்திடும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

### அழித்தொழிக்கும் அரசியலமைப்பு

இங்கு இப்படி ஓர் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கும் வேளையில் தமிழ்மொழிக்கு உரிய ஆட்சி உரிமையை அரசு பறித்து இலங்கைத் தமிழ் மக்களின் அரசுரிமைக்குக் குந்தகம் விளைவித்தது.

இன்னும் ஒருபடி எட்டி நோக்கினல் தமிழினத்தையே அழித்து ஒழித்திடும் அரசியலமைப்பை உருவாக்கித் தனிமனித சுதந்திரத்தையே தட்டிப்பறித்திடும் சூழ்ச்சியில் அரசு இறங்கியுள்ளது.

தமிழ் மக்கள் உரிமைகளுக்காகச் சீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அரசாங்கத்தின் அடிவருடிகளான ஒரு சில வெட்கங்கெட்ட தமிழர்கள், தங்களின் தாழ்ந்த எண்ணங்களால், தாழ்வுள்ள வளர்ப்புப் பழக்கத்தினல், கையேந்திப் பிழைக்கும் கடைப்பிழைப்பை தங்கள் முன்னேற்ற ஏணிப்படியாகக் கொண்டு, தமிழர் இனத்தைச் சிங்கள இனமாக ஆக்கிடத் தொடங்கியிருப்பது சூழ்ச்சிகளில் பெருஞ் சூழ்ச்சி.

### மதமாற்றம்

தாழ்ந்த மன[illegible]யால் இனத்தையே [illegible] கொடுத்து இன்புற்று வாழ நினைக்கும் இந்தத் துரோகிகள் தமிழ் மக்களை மதமாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மலையக வாலிபர்களே! நீங்கள் மிக மிக எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நமது நண்பர்களாகவே நடித்து நமது கைகளிலே நச்சுத் தைலத்தைத் தடவும் நயவஞ்சகர்களின் கைகளில் பிடிபடாதீர்கள்.

இதோ உங்களுக்கு உரிமை கிடைத்து விடும், உத்தியோகம் கிடைத்து விடும், அர

**கவிஞர் சக்தி பாலையா**

சாங்கத்தின் ஆதரவு கிடைத்து விடும், நீங்கள் பௌத்த மதத்தை ஏற்றுக்கொள்ளுங்கள், சிங்கள மக்கள் உங்களை ஆதரிப்பார்கள் என்றெல்லாம் ஏமாப்புச் செய்து உங்களை மதமாற்றி, இனமாற்ற மனமாற்றஞ் செய்ய இந்தத் துரோகிகள் வந்திருக்கிறர்கள். இவர்களை நம்பாதீர்கள். உங்கள் பெயர் பத்திரிகைகளில் வருவதைப் பெரிதாக நினைத்து உங்கள் இனத்தவருக்குத் துரோகியாகி விடாதீர்கள்!

எனது மலையகச் சகோதரர்களே, மலையகத்துத் [illegible] மலையக மக்களின் உரிமைகளுக்காக இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து உரிமைக்குரல் எழுப்பி வருகிறவனுகவும், தமிழ்மொழிக்காகவும், தமிழரின் தனித்துவ வளர்ச்சிக்காகவும், இடையருது உழைத்துவருகிறவன் என்ற திடத்தாலும், மலையகத்தில் பிறந்து வளர்ந்த மலையகத்தான் என்ற உணர்ச்சியாலும் உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்வது இது தான்;

### சந்தர்ப்பவாதிகள்

திராவிட பௌத்த கலாச்சாரச் சங்கம் என்ற பெயரிலும், மலையக இளைஞர் முன்னணி என்ற பெயரிலும் சந்தர்ப்பவாதிகள் மலையக வாலிபர்களுக்கு ஆசை காட்டி அவர்களது தூய்மையான இனப்பற்றை அழித்து வருகிறர்கள். இந்தச் சுயநலவாதிகளின் வெறும் பேச்சில் நம்பிக்கைகொண்ட பல நல்ல நண்பர்களும், இளம் பையன்களும், தாங்கள் தமது இனத்துக்கே துரோகம் செய்கிறேம் என்று அறியாமல் இந்தப் போலி நாடகத்தில் கைப்பாவைகளாக்கப்பட்டிருக்கின்றனர்.

அண்மையில் திராவிட பௌத்த கலாச்சார சங்கத்தின் சூழ்ச்சித் திட்டங்களை அறியாது சங்கத்தில் சார்ந்து சங்கக் குழுவினரில் ஒருவராக இருக்கும் திரு. பாண்டியன் என்ற தமிழ் வாலிபரே தான் எதிர்பார்த்த இலட்சியம் தமிழ் சிங்கள ஒற்றுமைதான் எனவும், திராவிட பௌத்த கலாச்சாரம் அதைக் குறிப்பதாக எண்ணியதாகவும் என்னிடம் கூறினர். உண்மையறியாத நண்பர் பாண்டியனுக்கு நான் கூறியது அவருக்கு விழிப்பைத் தந்திருக்கிறது.

திராவிட பௌத்த கலாச்சாரம் என்ற பெயரை— திராவிட - சிங்கள கலாச்சாரம் என்றே, சைவ— பௌத்த கலாசசார சங்கம் என்றே —தமிழ், சிங்கள கலாச்சார சங்கம் என்றே மாற்றியமைத்திட்டால் சிங்களர், தமிழர் ஒற்றுமைக்கு வழிவகுக்குமென்பதே என் கோரிக்கை. இதற்கு உடன்பாடு இல்லை என்றல் தமிழினத்தை இனமாற்றும் சூழ்ச்சித்திட்டமாகவே அந்தச் சங்கம் கருதப்படுமென்றும் நான் விளக்கினேன்.

### எச்சரிக்கை

எனவே, திராவிட—பௌத்த கலாச்சார சங்கம் தமிழ் வாலிபர்களை மதமாற்றும் திட்டத்தினல் உருவானது என்பதும், பௌத்த மதத்தைப் பரப்பித் தமிழ் மக்களைச் சிங்களவராக்கும் வஞ்சனைச் செயலென்பதும் ஒழிவுமறைவின்றி தெரியவருவதால், மலையக வாலிபர்கள் இந்தச் சூழ்ச்சிக்குள் விழுந்துவிடாமல் எச்சரிக்கையாக இருந்திடவேண்டுமென்பதே என் பேரவா.

நமக்கும் விடுதலையுண்டு. அந்தநாள் நாம் தலைநிமிர்ந்து சரிசமமாக வாழும் நிலைக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாதிருந்திட வேண்டுமானல், நமது இனத்தையும் மொழியையும் எக்காரணம் கொண்டும் இழந்துவிடாதிருக்கத் துணிந்து எழுங்கள், சந்தர்ப்பவாதிகளின் ஆசை மொழிகளுக்கு வசப்பட்டு இனத்தையே தாழ்த்திவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சர்வாதிகாரத்துக்கு களம் அமைக்கப்படுகிறதா?

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவிலில் யாரோ ஒரு பக்தர் 'காஞ்சிவரதப்பா' என்று கன்னத்தில் போட்டு வணங்க, அது பத்துநாள் பட்டினியாகக் கிடந்தவன் காதில் 'கஞ்சிவரதப்பா' என்பது போலக் கேட்க, அவன் 'எங்கே வரதப்பா?' என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டே கஞ்சிக்கலயத்தையும் தூக்கிக்கொண்டு ஓடினும்! இப்படி நகைச்சுவையுடன் கூறுவார் காலஞ்சென்ற கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம்!

இதேபோலவே இந்நாட்டு மக்களும் கஞ்சிக் கலயத்தை தூக்கிக்கொண்டு உணவுக்கு அலையவேண்டிய ஒரு நிலைக்கு இன்றைக்கு ஐக்கிய முன்னணி அரசு இந்நாட்டுப் பொருளாதார நிலைமையை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது!

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனையும் கடித்ததுபோல—ஏனைய சகல உபஉணவுப் பொருட்களினதும் விலையை உயர்த்தி, மக்களை வாட்டிவருபவர்கள் —இப்போது, முக்கிய உணவுப் பொருளான அரிசியிலும் கைவைக்கவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறார்கள்!

1970 தேர்தல் சமயத்தில், விலைவாசியைக் குறைப்போம் — வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் — மக்களுக்கு வசதியான வாழ்வைக்கொடுப்போம் என்று கூறி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆளுங்கட்சியினர் தங்கள் சொந்த வசதிகளைப் பெருக்கிக்கொண்டார்களே தவிர மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவில்லை.

மக்களின் வாழ்க்கை வசதிகளை பெருக்காதுவிட்டால் கூட போகட்டும் என்று மன்னித்துவிடலாம்; ஆனால் கொடுத்த வாக்குறுதிக்குமாறாக, விலைவாசிகளைக் கூட்டி, வாழ்க்கைச் செலவை அதிகரித்து—மக்களை இன்று உயிருடன் கொல்லுகின்றார்களே அதிகாரபீடத்தினர்— இதை யார்தான் மன்னிக்கமுடியும்?

மாவு, சீனி, பாண், மிளகாய், பருப்பு, உழுந்து, உப்பு, போன்ற சகல உபஉணவுப் பொருட்களும் இரவோடிரவாக விலையேற்றப்பட்டன. மண்ணெய், பெற்றோல் போன்ற பொருட்கள்—மானத்தை மறைப்பதற்கு வேண்டிய துணிமணிகள், உடுபுடவைகள் —இளம் மாணவ சமுதாயத்துக்குவேண்டிய பாடபுத்தகங்கள் — மருந்துகள் — அத்தனையுமே 'கெசட்' உத்தரவின்கீழ் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சுருங்கச் சொன்னால் — விலை அதிகரிக்காத ஒரு சிறு பொருள் கூட இந்நாட்டில் இன்று இல்லை! வாழ்க்கைச் செலவை சமாளிக்கமுடியாது திண்டாடுகிறார்கள் மக்கள்!

வாழ்க்கைச் செலவு உயர்வால் வாடுகிறார்களே மக்கள் என்று கூறினால், நாட்டுக்காக தியாகம் செய்யுங்கள்— சோசலிசம் வரும்போது, இப்படி துன்பங்களை அனுபவிக்கத்தான வேண்டும் என்கிறார்கள் ஆளுங்கட்சியினர்!

'சோசலிசம்' எப்போது வரும் என்று கேட்டால்—பிற்போக்கு சக்திகள் அதற்குத் தடைக்கல்லாக இருப்பதாக கூறி, முதலில் மூதவையை ஒழித்தனர்; கோமன்றச் சபைக்கு மேன்முறையீடு செய்யும் வசதியை இல்லாமற் செய்தனர்; சோல்பரி அரசியல் திட்டம்தான் சோசலிச இலட்சியத்துக்கு தடையாக இருப்பதாக கூறி, இலட்சக்கணக்கான ரூபாய்களை தண்டச் செலவு பண்ணி, அரசியல் நிர்ணய சபையமைத்து, பொதுவாக நாட்டு மக்களினதும்—குறிப்பாகத் தமிழ் மக்களினதும்—உரிமைகளைப் பறிக்கும் புதிய எதேச்சாதிகார அரசியல் சட்டத்தை கொண்டுவந்தனர்.

இதன்பின்னும் 'சோசலிசத்துக்கு' முட்டுக்கட்டை இருப்பதாக கூறி பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கும் நோக்குடன் பத்திரிகை சபை மசோதாவைக் கொண்டுவர வரிந்துகட்டிக்கொண்டு நிற்கின்றனர் ஆட்சியாளர்கள்!

இப்படிப்பட்ட மக்கள் விரோத—சமுதாய விரோத— ஆட்சியில்தான் இன்று மக்களின் முக்கிய உணவான அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்திடம் கையிருப்பிலுள்ள அரிசி, கூப்பனுக்கு வழங்குவதற்கு ஒரு மாதத்துக்கு கூட காணாமல் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது உண்மையானால் மக்களின் வரிப்பணத்திலிருந்து கைகளையாக சம்பளம் பெறும் அமைச்சர்களும், மற்றும் அதிகாரிகளும் கடைசி நேரம் வரை என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் அவர்கள் முற்கூட்டியே நடவடிக்கை யெடுத்து, அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க தகுந்த ஏற்பாடு செய்யவில்லை?

மக்களின் வரிப்பணத்தில் சுகபோகங்களை அனுபவித்தும், உல்லாச பயணங்கள் மேற்கொண்டும் வரும் அமைச்சர்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும், மக்களுக்கு வயிறு என்று ஒன்றிருப்பதும், 'பசி' என்று ஒன்றிருப்பதும் நினைவுக்கே வராமல் போய்விட்டதா?

நாட்டில் அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டு அதனால் பட்டினிச்சாவுகள் ஏற்படுமானால், அதற்கு முழுக்க முழுக்க அரசாங்கத்தின் அசிரத்தையே காரணம் என்று நாம் குற்றம் சுமத்துகிறோம்!

இரவோடிரவாக கசெட் உத்தரவை வெளியிட்டு— தனியார் துறையினரிடமிருந்த அரிசியைக்கைப்பற்றி நிலைமையைச் சமாளிக்க முயல்கிறது அரசு! இதுபனிபெய்து குளம் நிரம்பிய கதையாகத்தான் முடியும்!

தனியாரிடமிருந்து கைப்பற்றப்படும் அரிசி ஒழுங்காக அரசாங்கப் பண்டசாலை சென்று, அங்குள்ள பெருச்சாளிகளிடமிருந்து தப்பி பொது மக்களின் கைகளுக்கு நேர்மையாக வந்துசேருமா? என்பது ஒரு கேள்வி! அடுத்து, கள்ளச் சந்தையில், அரிசி விலை உயர்வைத்தடுக்க அரசு என்ன நடவடிக்கையெடுத்துள்ளது என்பது மற்றக்கேள்வி. இத்தகைய கேள்விகளை இன்று [illegible]துமக்கள் எழுப்புகின்றனர்.

வெளி நாட்டிலிருந்து அரிசி தருவிப்பதற்கு பணம் இல்லையென்று கூறி அரசு தப்பிவிட முடியாது; இராணுவத்துக்கும் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்கும்—இப்படியான பாதுகாப்பு செலவுக்கு பலகோடி ருபாக்களை கொடுக்கும் அரசுக்கு, மக்களின் பசிப் பிணியைப்போக்க பணம் இல்லையென்றால் மக்கள் புரட்சியில் இறங்குவதைத்தவிர வேறு மார்க்கமில்லை!

இன்று அரசு பின்பற்றும் முறைகளைப் பார்க்கும் போது, இலங்கையில், ஒரு மார்க்ஸிய சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடப்படுகிறது என்றே அஞ்சவேண்டியுள்ளது.

எந்த நாட்டிலும் வறுமை, பஞ்சம், பட்டினிச்சாவு, விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற மக்கள் பிரச்சினைகளே ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு வித்திட்டிருக்கின்றன.

இந்நாட்டிலும், வறுமையையும், பஞ்சத்தையும் பட்டினியையும் விதைத்து—நாட்டை ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு பலியாக்குவதற்கு ஆளுங்கட்சியிலுள்ள சர்வாதிகார வெறிபிடித்த சிலர் ஆசைப்படுகிறார்கள் போலும்! இதனால்தான் மக்களுக்கு சொல்லொணு கஷ்டங்களை வேண்டுமென்றே அவர்கள் ஏற்படுத்துவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்!

இது உண்மையானால்—நாட்டை சர்வாதிகாரப்பிடியிலிருந்து மீட்கவும்—சனநாயக நெறி முறையைப் பாதுகாக்கவும், நாட்டுமக்கள் அனைவருமே தயாராக இருக்க வேண்டும்!

---

வடக்கு கிழக்கில்:

# சில குறிப்பிட்ட நீதிமன்றங்களில் மட்டும் தமிழ் உபயோகிக்க வசதி

## அதுவும் அமைச்சர் உத்தரவிட்டால்மட்டுமே!

### நீதிமன்ற மொழி மசோதா கூறுவது இதுதான்!

வடக்கு, கிழக்குமாகாணங்களின் நீதிமன்றமொழி தமிழ் என்பது அரசியல் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படவேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்குப்பதிலாக, இதுசம்பந்தமான ஒருகண் துடைப்பு மசோதா ஒன்றை வர்த்தமானியில் அரசு வெளியிட்டுள்ளது.

வரவிருக்கும் காங்கேசன்துறை இடைத்தேர்தலை மனதில் கொண்டே இந்த மசோதாவை அரசு அவசர அவசரமாகக் கொண்டுவரவிருக்கிறது!

இம்மசோதாவின்படி, நீதியமைச்சரின் உத்தரவின்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சில குறிப்பிட்ட நீதிமன்றங்களில் மட்டுமே தமிழ் பயன்படுத்தப்படும். அதாவது அமைச்சர் எந்தெந்த நீதிமன்றத்தில் தமிழ் பயன்படுத்தப்படவேண்டும் என்று உத்தரவிடுகிறாரோ அந்தந்த நீதிமன்றங்களில் மட்டுமே தமிழ் பயன்படுத்தப்படும். தமிழுரிமையின் 'பிடி' இன்னும் நீதியமைச்சரின் கையிலேயே இருக்கும்.

---

# 'தியாக வரலாறு படைக்கிறார்கள் தமிழ் ஈழத்தின் இன்றைய இளைஞர்கள்!

## தமிழ் இனம் சுதந்திரமடைவது நிச்சயம்!'

### அண்ணாவிழாவில் நாவலர் அமிர்தலிங்கம்

"இனம் இனத்தை அடக்குவதை வெறுத்து, அந்த அடக்குமுறையை எதிர்த்துப் போராடியவர் அறிஞர் அண்ணா. இன சமத்துவத்தை வற்புறுத்திய அவர், இன விடுதலைக்காகப் பாடுபட்டார்."

இவ்வாறு தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம், கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திருக்குறள் முன்னணிக் கழகத்தினால் நடத்தப்பட்ட அண்ணா நினைவு கூட்டத்தில் பேசும போது தெரிவித்தார்.

கூட்டத்திற்கு மாவை சோ. சேனாதிராசா தலைமை வகித்தார்.

திரு. க. திருநாவுக்கரசு பேசும்போது, விடுதலைப் போரில் அண்ணா காட்டிய வழியைப் பின்பற்றவேண்டும். அவர் செயல்பற்றி ஒருகணமேனும் சிந்திக்கவேண்டுமெனவும், நம் இளைஞர்கள் சோர்ந்து விட்டனராகையால் வீர உணர்ச்சி ஏற்படச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்றும் சொன்னார்

காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த கவியரங்கில் கலியுகன், மரியதாஸ், வே. ஐயாத்துரை ஆகியோர் பங்குபற்றினார்கள்.

நாவலர் அமிர்தலிங்கம் அங்கு நிகழ்த்திய சொற்பொழிவில் பின்கண்டவாறு கூறினார்:-

"அன்று அண்ணாவைத் திட்டியவர்கள் வகுப்புவாதியென இகழ்ந்தவர்களெல்லாம் இன்று நான் முந்தி, நீ முந்தி என அவருக்குவிழா எடுக்கிறார்கள். ஆனால் அவரது கொள்கை, லட்சியம் என்பன இவர்களுக்குப் புரியாததாகவே இருக்கிறது.

அண்ணாவின் இனப்பற்று தென் இலங்கையிலுள்ளது போன்ற இன வெறியல்ல. இன விடுதலையை அவர் முக்கியமாகக் கொண்டது அடிமைப்பட்டு தமிழினம் இருப்பது மிக இழிவானதெனக் கருதியேயாகும். இதனை உணரமுடியாது அவரை ஹிட்லருடன் ஒப்பிட்டுப் பேசியவர்களும் உண்டு. ஆண்டு கெட்ட சமுதாயம் அடிமைத்தனத்தில் அல்லலுற்ற சமுதாயம் ஏற்றம் பெற வேண்டுமென்றார். அந்தச் சமுதாயம் தன்னைத் தானே ஆட்சிபுரியவேண்டுமெனப் பாடுபட்டார். இதனை வகுப்புவாதம் என்பதா? எந்த ஒரு இனமும் தன் சொந்த மொழியை ஆட்சி மொழியாக்க விரும்புவது வகுப்புவாதமா? இதில் தவறென்ன இருக்கிறது?

ஆட்சி பீடமேறி இந்தி தொண்டைக்குள் புகமுயன்றதை அண்ணா தடுத்தார்.

அதேபோல் இலங்கையிலும் தமிழ ஆட்சி மொழியாக வேண்டும். ஆனால் இங்கு சைவமும், தமிழும் வளர்த்த நாவலருக்கு கலாசார அமைச்சர் விழா எடுத்த மறுவாரமே, புத்தூரில் தமிழ்ப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களம் திணிக்கப்பட்டது. இது பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாகும். ஆசிரியவேலைக்காகபௌத்த பாடசாலை தொடங்கியவர்கள், இன்று அந்த பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு விட்டனர். அதே பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேசிய நலன் கருதி தோட்டங்கள் பொதுச் சொத்து ஆக்கப்படுவதை நாம் ஆதரிக்கிறோம். தமிழருடைய தோட்டங்களை மட்டுந்தானு தேசிய மயமாக்கவேண்டும். அந்தத் தோட்டங்களில் இருந்த தமிழ் தொழிலாளரைப் பலவந்தமாக நடுத்தெருவில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, அவர்களது வீடுகளைத் தீயிட்டுத் திருப்திகாண்கிறார்கள். தமிழ்தொழிலாளிக்குப் பதில் சிங்களவரைக் கொண்டுபோய் தோட்டங்களில் திணிக்கிறார்கள். இது எந்தவிதமான சமதர்மம என்பதை வி. பொன்னம்பலம் போன்றவர்கள் கூறட்டும்.

விடுதலைக்காக மனுச் செய்ய மறுத்தும் பிடிவாதமாக இருக்கும் காசிஆனந்தன், உறுதி தளராத இ. போ. ச. மணியம், வண்ணை ஆனந்தன் இவர்கள் எல்லாம் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களை மட்டுமல்ல. விடுதலைத் தப் போராடி அதனால் இன்னல் பல ஏற்றுச் செயல்பட்டிருக்கும் வாலிபர்களையும் எண்ணிப் பாருங்கள். இத்தகையவர்கள் இருக்கும் போது நாம் ஏன் நம்பிக்கை இழக்கவேண்டும்? அவர்கள் தங்களைத் தியாகம் செய்து, சமுதாயத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் இளைஞர்கள் விழித்துவிட்டனர். எனவே அண்ணா காட்டிய வழியில் போகத்தான் போகிறோம். ஒரு வாலிபன் 73 காயங்களைத் தாங்கிக்கொண்டான் என்றால், இளைஞர்கள் விழித்துவிட்டனர் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் விடுதலையில் அக்கறை கொண்டவர் எம். ஜி. ஆர்!

## இனத்துரோகிகளின் அழைப்பை ஏற்று அவர் ஈழம் வருவாரா?

எம். ஜீ. ஆரைக் காங்கேசன்துறைத் தொகுதிக்கு அழைக்க வி. பொன்னம்பலம் அவர்கள் முயற்சி செய்து வருகிருராம்!

கொள்கையாளர் பேரறிஞர் அண்ணுவில் அன்பு கொண்ட உண்மைத் தமிழ் மக்களே சிரியுங்கள்! விழுந்து விழுந்து சிரியுங்கள்!

சிங்கள வெறியர்களுடன் சேர்ந்து தமிழுக்கும் தமிழினத்திற்கும் கொள்ளிவைத்த வருவதோடு, தமிழ்நாட்டுடன் ஈழத்தமிழர் கொண்டுள்ள சகல தொடர்புகளேயும் துண்டித்து, நாசம்செய்யும் முயற்சியில் அல்லும் பகலும் ஈடுபட்டுவரும் பொன்னம்பலம், அண்ணுவின் கொள்கைவழி நிற்கும் எம். ஜீ. ஆரை அழைக்க அவர் காலில் விழப்போகிருராம்!

தமிழ் மக்களேசிரியுங்கள்! பொன்னம்பலத்தின் விழுகையைப் பார்த்து நன்ருகச் சிரியுங்கள்!

அரசியல் வியாபாரத்தில் விழுந்து, சலிப்புடன் காங்கேசன்துறை உபதேர்தல் செய்தியைக் கேட்டதும் ஓடிப்போய் ரஷ்யாவில் விழுந்த பொன்னம்பலம் தேர்தலில் தான் நிற்பதைக் 'கடத்தி' தனது கட்சிக்காரருக்கும் பதில்கூறமுடியாத நெருக்கடியால், ஈற்றில் 'ஆத்தாத' நண்டு தணலைக் கவ்வியதுபோல், தேர்தல் விளம்பரமாக்க எம். ஜீ. ஆரைப் பிடிக்கப்பார்க்கிருர்!

தன்னைப்போல் தமிழினத் துரோகிகளுடன் சேர்ந்து வயிறுவளர்ப்பவர் எம். ஜீ. ஆர். என்ற சாதாரண நினைப்பு இந்தப் பொன்னம்பலத்திற்கு! எவ்வளவு நெஞ்சழுத்தம் இவருக்கு!

காங்கேசன்துறைத் தேர்தலுக்கும் எம். ஜீ. ஆரை அத்தொகுதிக்குத்தான் அழைப்பதற்கும் எவ்விதமான தொடர்புமில்லையென்று பொன்னம்பலம் கூறியுள்ளார். தொடர்பு எதுவும் இல்லையென்று, இப்படிக் காரணமில்லாது அவசரப்பட்டு விளக்கம் கொடுத்த தன்மூலம்தேர்தலுக்காகவே எம். ஜீ. ஆரை அழைக்கத் தெண்டிக்கிருர் என்ற நாமறிந்த பகிரங்க உண்மை அவரை அறியாமலேயே அவர்வாயால் வெளிப்பட்டு விட்டது!

இங்குள்ள தொழிலாளிகள் செருப்பு அணியும் காலம் வரும்வரைதான் செருப்பு அணிவதில்லை என்று ஒரு கருத்தைக் கக்கி அதை மக்கள் எல்லோரும் நம்புவதாக நம்பி வெய்யில் சுடச்சுட நடப்பவர் அல்லவா பொன்னம்பலம்!

இலங்கைக் கம்யூனிஸ்ட்டுக்கள் (மாஸ்கோ) இன்று இடத்திற்கிடம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கை பேசி விடுகாலிகளாக வயிறு வளர்க்கத் தப்பிலித்தனம் செய்துவருகிருர்கள். இவர்களைத்தான் 'சுதந்திரன்' ஆசிரியர் 'கம்யூனிஸ்ட் வௌவால்கள்' என்று சுவைபடச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கம்யூனிஸ்ட் 'அருவருப்புக்கள்' இங்குள்ள மானமுள்ள உண்மைத் தமிழ் மக்கள் 'அண்ணு', கருணுநிதி, எம். ஜி. ஆர்., தி. மு. க. என்றெல்லாம் உச்சரிப்பதே தேசத்துரோகம் என்று, தமிழரையும், தமிழ்க் கலை கலாசாரங்களையும் அழிக்கத் திட்டமிட்டுச் செயற்படும் அரசுடன் சேர்ந்து—யார் யார் தி. மு. க. வுக்கு ஆதரவாகப் பேசுகிருர்கள், யார்யார் அண்ணு விழாவில் பேசுகிருர்கள், என்றெல்லாம் கொள்ளிக் கண்களால் பார்த்து, தமிழ் விடுதலை வீறுகொண்ட வாலிபர்களுக்கும், தலைவர்களுக்கும் அநீதியான முறையில் தொல்லைகொடுத்து வருகின்றனர்.

அதுமட்டுமா? எம். ஜீ. ஆர். ரசிகர்களையுமல்லவா கிண்டல் பண்ணி வருகின்றனர்!

### 'தமிழ்ப் பேரரசு'

இந்நிலையில் காங்கேசன் துறைத் தேர்தல் ஆசை கண்ணை மறைக்க பொன்னம்பலத்தார் எம். ஜீ. ஆரை அழைக்க முயற்சித்தால் தமிழ் மக்களுக்குச் சிரிப்பு வராதா?

பேரறிஞர் அண்ணுமறைவு குறித்து உலகத்து கண்ணியமான அரசியல் தலைவர்களெல்லாம் அனுதாபம் தெரிவித்தனர். ஆனல் இலங்கை அரசோ அண்ணுவின் மறைவிலும் 'தமிழன்' என்ற இனவெறியைக் கக்கியது. மறைவிலும் இரக்கம் காட்டும் மனித இயல்பில்லாத, இதயமற்ற அந்த இனவெறியர்களின் கருத்தே நமது கருத்தே நமது கருத்து என்று பேசாமல் வாய்மூடி இருந்தது இந்தப் பண்பற்ற கம்யூனிஸ்ட் கும்பல். இதை மானமுள்ள எந்தத் தமிழ் மகனும் மறப்பானு!

இத்தகைய கருத்துக் கும்பலில் ஒருவரான பொன்னம்பலம்தான் இன்று அண்ணு தி. மு. க.வின் தலைவரான எம். ஜீ. ஆரை அழைக்கிருராம்! தமிழ் மக்களே சிரியுங்கள், நீங்கள் சிரிப்பது பொன்னம்பலத்தின் காதில் கேட்கிறதாம்!

அண்ணுவின் படத்தை வைத்திருப்போரை, அண்ணுவின் தமிழ்நடையில்பேச முற்படுவோரை முறைத்துப் பார்ப்பது, அண்ணுவின் நூல்களையும், கொள்கைகளையும் பரப்பும் தமிழ் இயக்கங்களின் ஏடுகளைத் தடை செய்யவேண்டும் என்று கூச்சல்போடுவது, இத்தனையையும் தமது எசமானர்களாகிய சிங்கள வெறியர்களுக்குத் திருப்பணியாகச்செய்து வயிறுகழுவும் பொன்னம்பலம் கும்பல் இன்று எம். ஜீ. ஆரை அழைக்க முயற்சிக்கிறது! செருப்பால் அடித்துவிட்டு பட்டுக்குஞ்சம் கட்டும் கும்பலல்லவா இவர்கள்!

ஏன்? காங்கேசன்துறைத் தேர்தலுக்கு எம். ஜீ. ஆரை விளம்பரமாக்க அழைக்கிறேன் என்று அவரது மானரோசமற்ற 'அரசியல்' அறிவு கூறலாம் அல்லவா?

இதெல்லாம் இங்குள்ள மானம்மிக்க, விடுதலை வேட்கைகொண்ட தமிழ்மக்களுக்கும், அண்ணுவின் கொள்கைப்பிடிப்பால் தமிழர்களின் பேரன்பைப்பெற்ற தம்பியர்களில் ஒருவரான எம். ஜி. ஆருக்கும தெரியாது என்பது பொன்னம்பலத்தின் எண்ணமா?

அண்ணுவின் கருத்துக்களை—அறிவியக்கப் பிரச்சாரத்தை தாங்கிய எம். ஜி. ஆர். படங்களை ஈழத்துக்கு வரவிடாமற் தடைசெய்ய முயன்று வரும் இன்றைய சிங்கள அரசாங்கத்தின் ஓரங்கம்தான் கம்யூனிஸ்ட் கட்சி. இந்தக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்தான் வி. பொன்னம்பலம் இது மக்கள் திலகத்துக்கு தெரியாமல் போகுமா?

அண்ணுவின் இறுதி ஊர்வலத் திரைப்படத்தைக் கூட ஈழத்தில் திரையிடவிடாமல் அரசாங்கத்தைக் கொண்டு தடுத்தவர்கள் இலங்கை கம்யூனிஸ்டுகள்—இந்த உண்மையை எம். ஜி. ஆருக்கு தெரியாமல் மறைக்க முடியுமா?

தன்னிகரற்ற தமிழர் தலைவன் அண்ணுவின் கொள்கை வழி நான் நிற்பேன் என்று கூறிவரும் எம். ஜி. ஆர். தமிழ் இனத்தை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் சிங்கள அரசுக்குக் கால்பிடித்து வயிறுவளர்க்கும் இந்தக் கம்யூனிஸ்ட் பொன்னம்பலத்தின் அழைப்பை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

பசித்த செட்டியார் பழங் கணக்குப் பார்ப்பதுபோல் காங்கேசன்துறைத் தேர்தலுக்குத் தனது கட்சிக்காரர்களிடமிருந்து தப்பமுடியாத நிலையிலேதான் பொன்னம்பலம் எப்பொழுதோ தனக்கும் எம். ஜி. ஆருக்கும் தொடர்பிருந்ததாகக் கண்டு பிடித்து தனக்கு விளம்பரம் கொடுக்கிருர்!



அண்ணு, எம். ஜி. ஆர். கருணுநிதி, தி. மு. க., தமிழ்நாடு, தமிழ்மொழி, ஆகியவற்றின் பகைவர்கள் கையில் இருக்கும் பொன்னம்பலம், எம். ஜி. ஆர். குண்டடிப்பட்டு உயிருடன் போராடிய காலை அதை அலட்சியம் செய்து சிங்கள வெறியருடன் மகிழ்ந்திருந்த பொன்னம்பலம், இப்போது சொல்கிருர் தனக்கும் எம். ஜி. ஆருக்கும் முன்பு தொடர்பு இருந்ததாம்! மக்கள் திலகத்தைக் காட்டி தேர்தல் தொகுதி மக்களிடையே தனக்கு தேர்தல் விளம்பரம் தேடுகிருர். ஆம், தனது குறளிவித்தைக்கு உதவிசெய்ய மக்கள் திலகத்தைப் பொம்மையாகக் கணித்து விட்டார்.

எம். ஜி. ஆரை அழைத்தால் மக்கள் தனது ஆதரவாளர்களாக மாறுவார்கள், அதன் பின்பு காங்கேசன்துறைத் தேர்தலில் குதிக்கலாம் என்பது இந்தப் படித்தும் புத்தியில்லாத பொன்னம்பலத்தின் வீண் கனவு!

எம். ஜி. ஆரை இங்கு வர அனுமதிக்கக்கூடாது. என்று அரசினருக்கு முன்பு தூபம் போட்ட—இப்பொழுது எதிர்வரும் ஆண்டில் நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்குக் கூட எம். ஜி. ஆரை அழைக்கக்கூடாது என்று மறைமுகமாகத் தூபம் போட்டுக் கொண்டிருக்கும்—இந்தக் கும்பல், அவரை காங்கேசன் துறைத் தேர்தலுக்ககா மட்டும் அழைக்க அனுமதி தரவேண்டுமென்று அரசினருக்கு சமாதானம் கூறுகிறதா? அல்லாவிடில் இந்த அரசு வேறு எக்காரணத்திற்காகவும் மக்கள் திலகத்தை இங்கு வர அனுமதிக்காது என்பது எமக்குத் தெரியும். காரணம் அவர் அண்ணு வழியில் நிற்பவர்.

அண்ணுவையும், அவர்தம் கொள்கையையும், அவர் கண்ட தமிழ் நாட்டையும், அதற்கும் மேலாக அண்ணுவின் இனத்தையே உள்ளும் புறமும் வேஷிக்கும் சிங்களவெறியர் கூட்டத்துடன் சேர்ந்து இலங்கைத் தமிழர்களின் சுதந்திரத்தை துவம்சம் செய்யும் பொன்னம்பலம், தனது தேர்தல் விளம்பரத்திற்காகவே எம். ஜி. ஆரை அழைக்க முயற்சிக்கிருர், இதுவே உண்மை!

அண்ணுவின் கொள்கையிலும், இலங்கைத் தமிழர்களின் விடுதலையிலும் அக்கறைகொண்ட எம். ஜி. ஆர். இவை அனைத்திற்கும் விரோதமான சிங்கள வெறியரின் அடிவருடியான பொன்னம்பலத்தின் கபடத்தனமான, உளத்தூய்மையற்ற அழைப்பை ஏற்க மாட்டார் என்று திடமாக நம்புகிரேம்!

---

# எம். ஜி. ஆர். கருணுநிதி இருவருமே ஈழத் தமிழர்களின் நண்பர்கள்!

## தமிழக அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி மீன் பிடிக்கக் கனவு காணுகிருர் வீ. பி!

கீரிமலை அபிவிருத்தியையொட்டி நிதி திரட்டுவதற்கு எம். ஜி. ஆரை அழைக்கவிருக்கிருராம் கம்யூனிஸ்ட் வி. பொன்னம்பலம். மாஸ்கோ சென்று பெற்று வந்த அரசியல் சிகிச்சை முறைகளில் இதுவும் ஒன்று போல் இருக்கிறது.

பிளவுபட்ட தமிழ் நாட்டு அரசியல் நிலையை பயன்படுத்தி தமிழர் கூட்டணிக்குள்ளும் பிளவு ஏற்படுத்தலாமெனக்கனவு காண்கிருர் வி. பி. தமிழ் நாட்டு அரசியலுக்கும் தமிழர் கூட்டணிக்கும் தொடர்பு இருந்தாலல்லவா அவரின் கனவு பலிக்கும். பாவம் கற்பனைக் கோட்டையின் உச்சியில் நிற்கும் வி. பி. தப்புக்கணக்குப் போட்டுக் குப்புற விழுவதென்னமோ உண்மை.

எம். ஜி. ஆரை அழைப்பதன் மூலம் ஓர் அரசியல் விளம்பரம் நடத்தி தமிழ் மக்களைக் கூறு போட்டு அதன் மூலம் ஓட்டு லாபம் அடையலாம் என மனப்பால் குடிக்கும் பொன்னம்பலத்தின் கற்பனுசக்தி வேகம் பலேஜோர். நிதி திரட்டும் அழைப்பா அல்லது வருகிற காங்கேசன் துறை இடைத்தேர்தலில் ஓட்டுத் திரட்டும் அழைப்பா நடத்தவிருக்கிருர் என்பது அவருக்கே வெளிச்சம்.

எம். ஜி. ஆரின் அழைப்புக்கும் இடைத்தேர்தலுக்கும் எது வித சம்பந்தமுமில்லை என முழுப்பூசனியை சோற்றுள் மறைக்கப் பார்க்கிருர் திருவாளர் வி. பி. அவர்கள்.

"உலகம் சுற்றும் வாலிபன்" திரைப்படத்தின் காட்சிகளைப் படமாக்க இலங்கை வரவிருந்த எம். ஜி. ஆருக்கு அரசியல் காரணங் காட்டி அனுமதி தர மறுத்த இலங்கை அரசு, அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் எப்படி அனுமதி வழங்க முடியும்? எம். ஜி. ஆர். தமிழன். தமிழன் எங்கிருந்தாலும் அவன் உரிமையோடு சுதந்திர மனிதனுக வாழ வேண்டுமென்பதே அவரின் அவா. தமிழன் உரிமை குறைக்கும் எந்த முயற்சிக்கும் அவர் உடந்தையாக மாட்டார்.

மான உணர்ச்சியால் சுதந்திர வேட்கையால் ஆளப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் இனம் உரிமை கோரி ஒன்று பட்டிருக்கிறது. கூட்டணியின் கீழ் ஒன்றுபட்ட அவர்களை பிளவுபடுத்த நினைப்பது மதியீனம் எமக்கு வேண்டியது இனமத மொழி உரிமையே. அதைப் பெறுவதற்கு தமிழர் கூட்டணித் தலைவர்கள் காட்டும் வழியே நம் வழி. நமது போராட்டத்துக்கு ஒவ்வொரு தமிழ் மகனின் உதவியையும் எதிர்பார்க்கிரேம்.

எம். ஜி. ஆரும் கருணுநிதியும் நம்மிரு கண்போன்றவர்கள். இதில் எந்தக் கண்ணையும் குற்றிக்கொள்ள மாட்டோம். எம். ஜி. ஆரை அழைப்பதன் மூலம் இருல் போட்டுச் சுருப் பிடிக்க நினைக்கும் பொன்னம்பலமே உமது எண்ணமெல்லாம் தமிழனுக்கு அம்பலமே.

மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உணர்ச்சிக்கு மாநாட்டுக் குழுவினரே மதிப்பளிப்பீர்!

அண்மையில், இலங்கையில் நடைபெற இருக்கும் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் பார்த்து களிப்படைந்தோர் எண்ணற்றோர். ஆனால் மாநாட்டு அமைப்பாளர் ஆற்றும் உரைகளைக் கேட்டு மக்கள் குழப்பமடைந்துள்ளார்கள். மாநாட்டு அமைப்பாளர்கள் இவ் விழாவை அரசியற் கலப்பற்றதானதாக நடத்துவதற்கு விரும்புகிறார்களாம். ஆனால் அவர்கள் இப்போது ஈழத் தமிழகத்தில் உள்ள அரசியற் சூழ்நிலையை ஊன்றிக்கவனிக்க வேண்டும்.

ஈழத்தமிழகத்தில் தமிழர்கள் தமது வளம்மிகு தமிழ்மொழியைப் பேசி பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இன்று இலங்கைத் தமிழர்களுக்கு சரித்திரம் காணாதவாறு ஒரு ஆபத்து ஏற்பட்டுள்ளதென்று எல்லோரும்

அவர்களது கலாச்சாரத்தையும் திணிக்கிறார்கள். இப்படிச் சதித்திட்டங்களைச் செய்யும் ஆட்சியின் தலைவியையும், அமைச்சர்களையும் இவ்விழாவிற்கு ஏன் அழைக்கிறார்கள் என்று மக்கள் குழப்பமடைகிறார்கள். யாழ் நகரில் நடந்த நிதிக் குழுக்கூட்டத்தில் பதினைந்து நிமிடங்களில் இருபதினாயிரம் ரூபா சேர்ந்ததென்றால் அது தமிழர்கள் தமது மொழி மீதும் கலாசாரம் மீதும் கொண்ட அன்பினால் அன்றி நீங்கள் ஆட்சியினருக்குப் பிடிக்கும் பந்தத்திற்காக அல்ல என்பதை அமைப்பாளர்கள் கவனிக்க வேண்டும்.

தமிழாராய்ச்சி நடத்தும் அறிஞர்களே! முன்பு உலகத்தில் ஏறக்குறைய 33 நாடுகளில் தமிழர்கள் இருந்தார்

கூறுவர். இதற்காகவே இன்று ஒன்றுபட்டு தமது வலுவான எதிர்ப்பை ஆத்மீக சக்தியைக் கொண்டு அரசிற்கும் உலகிற்கும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களின் கலாசாரத்தையும் மொழியையும் உலகமே புகழ்கின்றது. ஆகையாலேயே உலகம் முழுவதுமுள்ள தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் எமது மொழி பற்றி ஆராய்ச்சிநடத்துகிறார்கள். ஆனால் எமது தாய் நாட்டில் எமக்கு என்ன நடக்கிறது என்பதை விழாக் குழுவினர் அறியாதவர்களல்லர்.

தமிழர்களை, பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், போன்ற பல்வேறு துறைகளில் நசுக்கிறார்கள். தமிழர் மீது சிங்கள மொழியையும்

கள். ஆனால் இப்போதுஇந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலாயா போன்ற சில நாடுகளில் இருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி செய்கிறீர்கள். அது பிழை—இலங்கையிலும் அவர்கள் தமிழர்களாக இன்னும் ஒருசில வருடங்களின் பின்பு இருக்கமாட்டார்கள் என்று ஆருடம் கூறவா எமது பிரதமரை அழைக்கிறீர்கள்.

இறுதியாக மாநாட்டுக் குழுவினருக்கு:- தமிழர்களுக்கு விழாக்கள் புதியவையல்ல. உங்கள் போக்கை சரியான பாதையில் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்கமாற்றுங்கள். இல்லையேல் அவர்கள் தமிழாராய்ச்சி மகாநாட்டையே பகிஷ்கரிக்கத் தயங்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

இப்படிக்கு

கட்டுப்பெத்தை இரா.

*

# சுதந்திரன் கருத்தரங்கம்

# இன்றேல் மாநாடு பகிஷ்கரிக்கப்படும்! தமிழ் இளைஞர்கள் போர்க்கோலம் கொள்வர்!

1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாள் ஈழத்திருநாட்டில்—குறிப்பாக ஈழத் தமிழகத்தில் ''தமிழாராய்ச்சி'' மகாநாடு நடைபெற விருப்பது குறித்து அக மகிழ்ச்சியினால் மிகக்களிப்படைகிறேன்.

தமிழறிஞர்களும், வித்துவான்களும், பண்டிதர்களும் — ஏன்? தமிழுக்காக — தமிழர்தம் உரிமைக்காக போராடும் எந்த ஒரு உணர்ச்சித் தமிழனும், தன் மானத்தமிழனும் இந்த ஓர் நற்செய்தி கேட்டு இன்புறாமல் இருக்கமாட்டான்.

ஆனால்...! யார் இந்த மாநாட்டுக்கு தலைமை தாங்குவது? யார் இம் மாநாட்டை முன்நின்று நடாத்துவது? சர்வாதிகாரப் போக்கில் இம் மாநாட்டை ''தமிழ் அவமான'' மாநாடாக்குவதா?

இந்நாட்டிலே உள்ள பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், தமிழுக்காக போராடிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே—

மலையகமும், வடக்கும்—கிழக்கும் ஒன்று சேர்ந்து, தம் உரிமைப் போராட்டத்திற்காக ஒன்றுபட்டிருக்கும் இப் பொன்னான நன்னாளிலே—

'அரசு' என்ற போர்வையின்கீழ் 'அராஜகம்' நடாத்திடும்—தமிழை குழிதோண்டிப் புதைக்க எத்தனித்திடும் — தமிழனை — தமிழன்னையை ''காட்டு மிராண்டிகள்'' என்று வசைபாடும்— சர்வாதிகார ஆட்சியாளர்கள், அவர்தம் பிரதிநிதிகள் — தமிழ்த் துரோகிகள்தானா மாநாட்டை திறந்து வைப்பது? தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்குவது?

கேவலம்! தமிழனுக்கு— அவனது மொழியுரிமையை — பேச்சுரிமையை — எழுத்துரிமையை —ஏன்? கல்வியுரிமையைத்தானும் வழங்க மறுத்திடும் 'தான்தோன்றி'களா தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைவர்கள்!? பேச்சாளர்கள்!!

1974ம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டைத் திறந்துவைக்க — தலைமைதாங்க நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் வில்லியம் கோபல்லாவும், பிரதமர் என்ற முறையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அழைக்கப்படுவார்களென விழா குழுவினர் ஏற்பாடு செய்திருப்பதுகண்டு பெரும் பேரதிர்ச்சிக்குள்ளானேன்.

அதிர்ச்சியா? அதிர்ச்சி மட்டுமல்ல! பெரும் ஆத்திரமும் அடைகிறேன்! ஏன் தெரியுமா?

தமிழுரிமைகோரி— அறிக்கைமேல் அறிக்கைவிட்டும், அசைந்துகொடுக்காதசர்வாதிகாரிகளை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பதே தவறு! அதைவிட பெருந் தவறு — அவர்களை தலைமை தாங்கச் செய்வது!

இந்நிலைமை நிச்சயம் நடைமுறைக்கு வருமாயின் தமிழ் இளைஞர்கள் கொதித்தெழுவர். தமிழன்னை சிறிப்பாய்வாள்! தீந்தமிழ் இலக்கியமாநாட்டிலும் அரசியலை புகுத்த எத்தனிக்கும் ஆட்சியாளர்கள்—அதன் பிரதிபலனாக — தமது தான்தோன்றித் தனத்தாலும் ஆணவமிடுக்காலும் தமிழரை — தமிழ்த்தலைவர்களை — தமிழறிஞர்களை புறக்கணிக்க முயன்றால் — சற்றில் அகில இலங்கை ரீதியாக ஒரு மாபெரும் 'போராட்டமே' தமிழர்கள் நடாத்தத் தயங்க மாட்டார்கள்! இது வெறும் வாய்ப் பேச்சு அல்ல! உறுதியானதுங்கூட!

விழாக் குழுவினரே! 'தமிழாராய்ச்சி மாநாடு' என்று பெரிய ஏற்பாடுகள் செய்து, தமிழரை புறக்கணித்து — சிங்கள ஏகாதிபத்தியத்தை மாநாட்டிலும் நிலை நிறுத்த நீங்களும் உடந்தையாயிருப்பீர்களானால், சற்றில் வட—கிழக்கு—மலையக இளைஞர்கள் அனைவரும் உங்களுக்கெதிராக 'போர்க்கொடி' பிடிக்கவும், சிங்கநிகர் வீராவேசங் கொள்ளவும் தயங்கமாட்டார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

மேற்படி தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஈழத்தமிழறிஞர்கள், தமிழ்த் தலைவர்கள் மட்டுமல்ல -- பாரதநாட்டு தமிழ் வித்துவான்களும், பேரறிஞர்களும் - குறிப்பாக தமிழக முதல்வர் கருணாநிதி இரா. நெடுஞ் செழியன், டாக்டர். மு. வரதராசனார், திருமுருக. கிருபானந்த வாரியார் போன்ற நல்லறிஞர் அனைவருக்குமே அழைப்புகள் அனுப்பப்பட வேண்டும். அவர் தம் குரலுக்கு மதிப்புக் கொடுத்துச் சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும்!

இல்லையேல், ''கடல்மடை திறந்ததா? — காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்ததா''வென அஞ்சுமளவுக்கு தமிழ் இளைஞர்கள் போர்க் கோலம் கொள்வர் என இறுதியாகவும், உறுதியாகவும் எச்சரிக்க விரும்புகிறேன்!

—எஸ். ஆர். ராஜா,
கினிகத்தெனை.

*

கடந்தவாரம் இப்பகுதி சக நண்பர்கள் இருவரின் உணர்ச்சி கலந்த, உள்ளக் குமுறல்களைக் கருத்துணர்ந்து கண்ணுற்றேன். சகிக்கவே முடியவில்லை.

தடை...ஆமாம்! என்னவென்று யோசிக்கிறீர்களா? எங்கள் தமிழினம் எந்தவொரு நிகழ்ச்சியைத்தான் தடையின்றிச் செய்ய முடிந்தது—எந்தவொரு காரியத்தைச்செய்யத் துணிந்தாலும் ஓர் தமிழ் மகனுக்குக் கிடைக்கும் முதல் ஆசீர்வாதம் அந்தத் தடைதான்! இப்படிப்பட்ட பல தடைகளின் மத்தியிலும் முன்னே வைத்த காலைப் பின்னே வைக்காமல் முன்னேறிக் கொண்டு வருகின்ற எங்கள் தமிழினத்திற்கு இப்போது ஒரு தடை வைக்கப்பட்டு விட்டது.

தமிழினத்தின் ஒற்றுமையை, பாரம்பரியகோட்பாடுகளை, திரமிகு வாழ்க்கையில் உதித்த உணர்ச்சிவசப்போராட்டங்களைத் தத்ருபமாக அமையப் பெற்ற சிற்பங்களாக, செய்யுள்களாக, செந்தமிழ்க் கட்டுரைகளாக வெளிப்படுத்தி எமது பிரதமர் அவர்களுக்குக் காட்டலாம். நமது நாட்டின் தலைவி என்ற முறையில் மகாநாட்டிற்கு அவரை அழைக்கலாம். ஆனால் அவர்தான் அவ்விழாவைத் திறந்து வைக்க வேண்டுமென்பதல்ல. ஏன்?

நம் தமிழினத்தில் பொறுப்பு வாய்ந்த புலவர்கள், பண்டிதர்கள், மகாவித்வான்கள், அன்றி சமூகத்தின் இன்னல்களைத் துடைத்தெறியப்போராடும் தமிழ் தலைவர்கள் ஒருவருமே கூட இல்லையா? அறிவிலிகள் நிறைந்த கூட்டமா தமிழினம்? தமிழ்த்தாயின் வயிற்றில் அவதரித்த நல்லறிஞன் ஒருவன் நமது தமிழாராய்ச்சி மகாநாட்டைத் திறந்து வைத்து நல்லுரையாற்றினால் அது தமிழாராய்ச்சி மகாநாடாக இருக்கமுடியாதா?

கவலைக்குரிய விடயம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய எங்கள் தமிழன்னைக்கு எடுக்கும் இவ்விழாவிலும் இப்பிரச்சினை நிறைந்த தடை ஆசீர்வாதமாகக் கிடைத்து விட்டது. வருந்துகிறேன். தமிழினமே! விடைகாண வேண்டாமா?

—எஸ். கே. எஸ். உதயன்
சண்டிலிப்பாய்.

# பௌத்த மதமாற்றம் இனத்தையே பூண்டோடு கருவறுக்கும்!

## புத்தூர் சம்பவம் நமக்கோர் எச்சரிக்கை!

புத்தூர் பஞ்சுக பாடசாலையில் நிகழ்ந்துள்ள சம்பவமானது தமிழ் மக்களிடையே உள்ள சிங்கள அரசின் வால்பிடிகளுக்கும் அனுதாபிகளுக்கும் ஒரு எச்சரிக்கையாகவும் பாடமாகவும் அமையட்டும்.

இந்தச் சம்பவங்களுக்கு மூலகாரணம், சில தமிழர் எனப்படுவோர், பௌத்த மதத்தினைத் தழுவியதே மாகும். இதுவே விகாரைகள் கட்டுவதற்கும் சிங்களப் பாடசாலைகள் அமைப்பதற்கும் இறுதியில் தமிழ்ப்பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தினையும் பௌத்தத்தினையும் திணிப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

தமிழ்ப்பிள்ளைகளின் போதனா மொழியைச் சிங்களமாக்கிட, தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்காலத்தினை இருண்டதாக்கிட யார் இந்த உரிமையைக் கொடுத்தது?

இப்பிள்ளைகள், இப்போது மிதித்த கொம்புமற்று பிடித்த கொம்புமற்ற வொரு நிலையில் உள்ளனர்கள்.

மதமாற்றத்தினால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை அன்றே அறிந்துதான் நாவலர் பெருமான் மதமாற்றத்தினை முற்றுமுழுதாகக் கண்டித்தார். வெறுத்தார், எதிர்த்தார்.

ஒருசில அற்பசொற்ப சலுகைகளுக்காக மதம் மாறுவோருக்கு இந்நிகழ்ச்சி ஒரு எச்சரிக்கையாகவும் பாடமாகவும் அமையட்டும்.

எந்தத் தமிழ் மகனுகட்டும் சரி சிங்களத்தில் பட்டம் பெற்றிடினும் அரசு பதவிகள் நியமனங்கள் வழங்குவதில் நிச்சயம் பாரபட்சம் காட்டிடும், தமிழ்இனத்தினை ஒதுக்கி அழித்திட முயன்றிடுமேயல்லாது திறமையை மதித்திடமாட்டாது. இதனை நிகழ்காலத்தில் நிகழும் சம்பவங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியினை ஈண்டு குறிப்பிடலாம். அண்மையில் இலங்கை நிர்வாக சேவைக்கு 166 பேர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதில் 4 பேர்களே தமிழர்கள். தமிழரின் கல்வித்தரம் குறைந்து விட்டதென்று அர்த்தமாகவில்லை. மற்றையோர் தமிழர் என்பதனால் தரம் அரசால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நாட்டில் நிகழ்பவைகளை மனதிற்கொண்டு தமிழ் மக்கள் தம்மிடையே உள்ள துரோகிகளை, புல்லுருவிகளை இனம் கண்டு கொண்டு அவர்களை ஒதுக்கி ஒழித்திடவேண்டும்.

தமிழ் மக்களிற் சிலர் பல சலுகைகளுக்காக தகாத, ஆபத்தான சக்திகளுடன் உறவுகொண்டுள்ளார்கள். அவ்வுறவுகளை உடனடியாக அறுத்தெறிந்திட வேண்டும்.

தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மேன்மேலும் பலப்படுத்திட வேண்டும்.

தமிழர் கூட்டணியினை மேலும் வலுவுள்ளதாக்கி தமிழர் தம் உரிமைப் போராட்டத்தினை விரைவுபடுத்திட வேண்டும்.

விரைவில் எமதுரிமைகளைப் பெற்றிட வேண்டும்.

இவைகளுக்காகவே ஒவ்வொரு தமிழனும் துடிக்கின்றான்.

இவை யாவும் தமிழர் கூட்டணியினரின் கவனத்திற்குரியவையாம்.

—"கடுகு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. பொன்னம்பலத்தின் ஏமாற்று வித்தை!

3-2-73ல் வெளியாகிய தினகரனில் 3ம் பக்கத்தில் இம்மாதம் மீன்பிடி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது, மாதகலில் ஒரு கலங்கரை விளக்கு அமைப்பதற்கு ஆலோசிப்பதற்காக அவரை மாதகலுக்கு விஜயம் செய்யும்படி திரு. வி. பொன்னம்பலம் அழைத்திருப்பதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

இங்கு கலங்கரை விளக்கம் ஒன்று அமைப்பதற்கு ஏற்கெனவே 17-3-69ல் பண்டத்தரிப்புக் கிராமச்சபையில் 6ம் வட்டார உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மாதகல் கிளையின் செயலாளருமான திரு. எஸ். பீ. போசவ் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கமையச் சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பேரில் மீன்பிடி இலாகாவில் இருந்து கலங்கரை விளக்கை அமைப்பதற்கு வேண்டிய கொங்கிறீற்தூணும் மற்ற உபகரணங்களும் 5-10-70ல் இங்கு அனுப்பப்பட்டன.

துரதிஷ்ட வசமாகப் புகையிரதத்தில் கொண்டு வரப்படும் பொழுது கொங்கிறீற் தூண் உடைந்துவிட்டது. இவ்விடயம் மீன்பிடி அதிபருக்கு அறிவிக்கப்பட்டு உடைந்த கொங்கிறீற் தூணுக்குப்பதில் 34 அடி உயரமான இன்னொரு தூண் அனுப்பும்படி அவர் மீன்பிடிக் கூட்டுத்தாபனப் பொறியிலளாரைப் பணித்துள்ளார். தூண் வரப்பெற்றதும் கலங்கரை விளக்கம் நிறுவப்படும். (இது சம்பந்தமாக நடைபெற்ற கடிதப் போக்கி வரத்தின் பிரதிகளை இத்துடன் இணைத்துள்ளேன்)

உண்மை இவ்வாறிருக்க இப்பொழுதுதான் புதிதாக ஒரு கலங்கரை விளக்கை அமைப்பதற்கு மீன்பிடி அமைச்சரை அழைக்கப் போவதாகத் திரு. வீ. பி. கூறுவது, யாரோ ஏற்கெனவே செய்து விட்ட வேலையைத் தாம் செய்துவிட்டதாகக் காட்டியாவது காங்கேசன்துறை உபதேர்தலில் மாதகலில் ஒரு சில வாக்குகளையாவது பெற்றுவிடலாமென்ற நப்பாசையன்றி வேறல்ல. மாதகல் மக்கள் இப்படியான செப்படிவித்தைகளில் ஏமாற மாட்டார்கள்.

— இவ்வாறு மாதகல் — பண்டத்தரிப்பு கிராம சபையின் 4-ம் வட்டார உறுப்பினர் திரு. எப். எக்ஸ். சி. சந்திரசேகரா சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சோசலிசமாம் சோசலிசம்...!

மருத்துவமனை- அனைவரும் செல்கின்ற பொது இடம். தமிழர் சிங்களவர், முஸ்லிம்கள் எல்லோரும் செல்கின்ற இடம். அப்படிப்பட்ட கொழும்பு பெரிய மருத்துவ மனையில், அறிவிப்புக்கள், விளம்பரங்கள் அனைத்தும் தனிச்சிங்களத்தில். தமிழில் ஒரு அறிவிப்புக்கூட இல்லை. 'வெற்றிலை துப்பக்கூடாது' நோயாளிக்கு இளனி கொடுக்கக்கூடாது, பழம் கொடுக்கக்கூடாது. போன்ற அத்தியாவசிய அறிவித்தல் அனைத்துமே தனிச் சிங்களத்தில் தான். தமிழ் நோயாளிகள் மொழி விளங்காது நாள் தோறும் தவிக்கிறார்கள்.

சிங்களம் தெரியாதவன் வெற்றிலை துப்பலாம்-இடத்தை அசுத்தப்படுத்தலாம் —நோயாளிக்கு பழமும் இளனியும் கொடுக்கலாமென்று டாக்டர்கள் சிபார்சு செய்திருக்கிறார்களோ நாமறியோம்!

இதுவும் ஒருவகை சோசலிசமோ?

## தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு கூட்டம்!

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் 18-2-73 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதில் ஆலோசிக்கப்படவுள்ள விஷயங்கள் வருமாறு:

- × தமிழ்ப் பிள்ளைகளின் போதனுமொழி மாற்றம்.
- × அரசியல் நிலையும் கூட்டணியின் அடுத்த நடவடிக்கையும்.

# உரிமைகளாம் உரிமைகள்

இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்று அரசு அலுவலங்களிற் பாவிப்புக்கென வெளியிடப்பட்டுள்ள 1973ம் ஆண்டுக்கான ஒருமுக நாட்காட்டியில் யூன் மாதம் இரு தடவைகள் வருவதும், யூலை மாதம் வராது தவிர்க்கப்பட்டுள்ளதும் அதிசயமானதொரு நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. தமிழ் நாட்காட்டியில் யூலை மாதம் தேவையற்றதென அரசு தீர்மானித்து விட்டது போலும். தமிழ் மக்களுக்கும் இதன் பின் யூலை மாதம் வரமாட்டாது போலும். தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் அரசு காண்பிக்கும் ஆர்வத்திற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டல்லவா?

மேலும், அரசியலமைப்பில், தமிழிற் தொடர்ந்து 'இலங்கை' என்றே வழங்கப்பட்டு வரல் வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அரசு அச்சுத் திணைக்களத்திற் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்படும் எந்தவொரு பிரசுரத்திலும் 'ஸ்ரீ லங்கா (இலங்கை)' எனவே அச்சிடப்பட்டிருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதுதான் தமிழருக்கும் தமிழுக்கும் அரசு வழங்கியுள்ள உரிமைகளிற் சிலவாகும்.

அரசுதமிழருக்கும் தமிழுக்கும் என்னவோ எல்லாம் அள்ளிக் கொடுத்துள்ளது எனக் குமாரசூரியர் கோஷ்டியினர் கொக்கரித்துத் திரிகின்றனரே, அவைகளில் இவைகளும் சிலவோ?

இக் 'காக்கை வன்னியர்கள்' இவ்விதமான அரைவேககாட்டுச் சலுகைகளைக் கண்டு குதூகலிக்கக்கூடும். ஆனல் தமிழ் மக்கள் இவ்வாறன 'அவமதிப்புக்களைக் கண்டு உள்ளம் கொதிக்கின்றனர் என்பதனை இந்தக் கோடரிக்காம்புகள் அறியவில்லைப் போலும்

தமிழ் மக்கள், அரசியலமைப்பில் சிங்களத்துக்கும் பௌத்தத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் போன்று, தமிழ் மொழிக்கும் மற்றைய மதங்களுக்கும் அரசியலமைப்பில் உரிமைகள் அளிக்கப்படும் வரை ஓய்ந்திருக்கமாட்டார்கள் என்பதனையும் திருவிளையாடல்களைக் கண்டு திருப்திப்படவும்மாட்டார்கள் என்பதனையும் இந்தக் குடிகேடர்கள் அறியட்டும்.

'கடுகு'

## மலையகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை வாழ விடாது பொலீசாரைவிட்டுத் துன்புறுத்தி விரட்டுகின்றது வெறிபிடித்த சிங்கள ஆட்சி!

அண்மையில் தேசிய மயமாக்கப்பட்ட சில மலையகத் தோட்டங்களிலிருந்து அங்கு வேலை செய்து வந்த இலங்கைப் பிரஜைகளான மலையகத் தமிழர்கள் சிலரை வேலையில்லை. என்று கூறிக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளியது அரசு! வேலையற்று வெளியே வந்த இந்த ஏழைத் தமிழர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரு கரம் நீட்டி வரவேற்றன.

தமிழர்களின் பாரம்பரியப் பூமியான கல்குடாத் தொகுதியில் இவர்களில் 200 பேர் குடியேறி காடு வெட்டி விவசாயத்திலிறங்கினார்கள். இவர்கள் மீது பொலிசார் நடவடிக்கையெடுத்து கொடுமைப் படுத்தி வருகின்றனர்.

இதுசம்பந்தமாக கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் அண்மையில் தேசியபேரவையில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

''எனது தொகுதியிலுள்ள வாழைச்சேனைப் பிரதேசத்தில் மலையகப் பகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்கள் சிலர் வந்து குடியேறினர்;

''இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ளவர்களான இவர்கள் இப்பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் காணிகளில் குடியேறி விவசாயம் செய்ய முயன்றனர்.

''இவர்களைப் போன்று பல சிங்கள மக்களும் இப்பகுதியில் குடியேறியுள்ளனர். குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு எவரும் தொந்தரவு கொடுக்கவில்லை. ஆனல் இப்பகுதியில் இவர்களைப் போன்று வந்து குடியேறிய இலங்கைப் பிரஜைகளான மலையகத்தமிழர்களை விரட்டியடிப்பதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் வசிக்கும் இயபுலானதேரோ என்ற ஒரு பௌத்த பிக்குவின் தூண்டுதலின் பேரில் மனிதாபிமான மற்ற இச்செயலில் பொலிசார் இறங்கியுள்ளனர்.

''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிசார் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் முறையில் கண்மூடித்தனமாக நடக்கின்றனர்.

இந்தியப் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்யமேலும் அவகாசம் அளிக்கும்படி இந்திய அரசைக்கோர முயலும் இலங்கை அரசு, இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள இந்திய வம்சாவளியினரை இந்நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போன்று நடாத்தத் தயங்குவது முறையற்றது''

இவ்வாறு தேவநாயகம் பேசினர்.

## நாடெங்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியார்கடைகளிலிருந்து அரிசி மூடைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அரிசி விற்பனை தடைசெய்யப்பட்டதையடுத்து, இனி அரிசித் தட்டுப்பாடும், அரிசி விலை அதிகரிப்பும் ஏற்படலாம் என மக்கள் அஞ்சுகின்றனர். கள்ளச் சந்தையில் இனி அரிசி விற்கப்படும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

இதே வேளையில், நாட்டில் ஒரு மார்க்ஸிய சர்வாதிகார ஆட்சி ஏற்படலாம் என்றும் மக்கள் அஞ்சுகின்றனர். நாட்டில் வறுமையையும், கஷ்டத்தையும், பொருள் தட்டுப்பாட்டையும், பஞ்சத்தையும் முதலில் உண்டுபண்ணி, மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி, அதன் பிரதிபலிப்பாக, நாட்டில் சனநாயகத்துக்கு வேட்டுவைத்து மார்க்ஸிய சர்வாதிகார ஆட்சியொன்றை உருவாக்கவே அரசாங்கத்திலுள்ள மார்க்ஸிய தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர். என்று பேசப்படுகிறது. இந்த நோக்கத்துடன்தான் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடவும் அவர்கள் துடித்து நிற்கின்றனர்.

## நகரசபை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி நடப்பதானல் எங்கள் வீரமிகு படையினரின் பிணத்தின் பின்னே தான் அது முடியும்.

### ஈழத்தமிழகமே எழு!

ஏ! தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! ஈழத்தமிழகமே! தமிழ்ப் பெரியார்களே! அறிஞர்களே! சைவ — கிறிஸ்தவ— இஸ்லாமியப் பேரறிவாளர்களே! உங்கள் குரலை எங்கள் பக்கம் திருப்புங்கள். இது தமிழர் பூமி — எங்கள் பரம்பரைச்சொத்து கோழையே பிறக்காத கோணேசமண்ணிது —ஈழத்துப் பாஞ்சலங்குறிச்சி இது —வீரம் விளையாடும் வீரர்கள் கோட்டமிது — தமிழ் மறவர் சூழ்ந்த தனித்தமிழ் நாடு இது. ஈழத்தமிழகத்தில் எழில் குலுங்கும் தலைநகரிது.

கண்டனங்கள் பறக்கட்டும்—கலைாக மக்கள் உள்ளம் கொதிக்கட்டும்—களத்தில் வீர மறவர்கள் குதிக்கட்டும் — மமதைபிடித்த ஆட்சி நமது குரலை — போராட்டத்தை மதிக்கட்டும்— ஈழத்தமிழகத்திலே இந்த அநீதியை எதிர்த்து எரிமலை வெடிக்கட்டும். தமிழ் உள்ளமெலாம் துடிக்கட்டும்.

நமது நகரை நாமே ஆள்வோம். கைப்பற்றவேண்டிய அளவு சேமலப்படவில்லை நமது நகரசபை. இது திட்டமிடப்பட்ட சதி—

ஏ! தமிழ்ப்பேசும் இனமே இன்னுமா உறக்கம். எங்கே உனது எதிர்ப்பு — எங்கே உனது துடிப்பு எழு! உன் தமிழ் நிலத்தில் ஒரு அங்குலம் கூட விட்டுக்கொடுக்காதே.

ஆட்க்கு முறைக்கு அஞ்சாதே தியாகம் [illegible] லாமல் எந்த [illegible] றது கிடையாது — இறுதி வெற்றி நமக்கே.

## தமிழில் நடைபெறும் வங்கியாளர் பயிற்சிக்கு ஆபத்து

மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக நீண்டகாலமாக விடுத்த கோரிக்கையின் விளைவாகவே வங்கியாளர் பயிற்சி நிறுவனம் தனது வகுப்புகளைத் தமிழிலும் நடாத்த உடன்பட்டு செயற்பட்டது.

ஆனல் அண்மையில், வங்கியாளா பயிற்சி நிறுவனம் நடாத்தும் தமிழ் வகுப்புகளில்கலந்துகொள்வோரின் எண்ணிக்கை மிகக் குறைந்துள்ளதால் தொடர்ந்து தமிழில் வகுப்புகளை நடாத்த முடியாத நெருக்கடி நிலை தமக்கு ஏற்பட்டுவருவதாக வங்கியாளர் பயிற்சி நிறுவனம், மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கச் செயலாளர் என்ற முறையில் எனக்கு அறிவித்துள்ளது.

காரணம் எதுவாயினும் நீண்டகால கோரிக்கையின் விளைவாக கிடைத்துள்ளஇவ்வரிய வாய்ப்பினை வங்கித் துறையில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் இழப்பது அறிவுடைய செயலல்ல. ஆகவே காலம் தாழ்த்தாது உடனடியாக கொழும்பில் வங்கித்துறையில் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் இலங்கை மத்திய வங்கிக்கட்டடத்தில் இயங்கும் வங்கியாளர் பயிற்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இல் நிறுவனம் நடாத்தும் தமிழ் வகுப்புகளில் சேருமாறு வேண்டுகிறேன்.

வங்கித்துறையில் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் தம்மையும் பாதுகாத்துக் கொண்டு தமிழ் இனத்தின் தொழித்துறை வாய்ப்பையும் நிலைக்க நல்முறையில் பாதுகாக்க ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

—இவ்வாறு மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்க செயலாளர் திரு. மா. க. கனகேந்திரன் ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை பற்றி இங்கேபேசுவதன் மூலம் அவர்களுக்கு மேலும் துன்பங்கள், துயரங்கள் நடக்கலாம்.

ஆனல் அதற்காக இதனைப் பற்றி இங்கே பேசாமல் விடுவதால் கேட்க ஆளில்லை என்ற நோக்கில் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகள் கொலைக்களமாகக் கூட ஆகிவிடலாம்.

இதுபற்றி புதுடில்லியில் உள்ள இந்தியப் பாராளுமன்றத்தில் பிரச்சினையைக் கிளப்பும்படி அகில இந்திய சுதந்திரக்கட்சித் தலைவர் பிலுமோடியை நான் கேட்டுள்ளேன்.

—இறுதியில் திரு. மணைவைத் தம்பி நன்றி கூறினர்.


திருக்குறள் தெளிவுரை

"மேழிச் செல்வம் கோழை படாது"

திருக்குறள்.

200 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி டாக்டர் மு. வரதராசனர் உரையுடன் கூடிய திருக்குறள் தெளிவுரை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### "இலங்கரத்தினவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில்:

# தமிழர் கூட்டணியின் பிரதிநிதியாக அல்ல-
# கூட்டுறவுச் சங்கத் தலைவராகவே கலந்து கொண்டேன்"

## கல்குடா தேவநாயகம் அறிக்கை!
## சிண்டு முடியும் தினபதிக்குச் சாட்டை!!

கடந்த 30-1-73ல் வெளியான 'தினபதி' நாளிதழின் முன்பக்கத்தில் 'மட்டக்களப்பில் அமைச்சர் இலங்கரெத்தினவுக்கு தமிழர் கூட்டணி அமோக வரவேற்பு' என்ற தலையங்கத்தின் கீழ் எனது பெயரும் உட்பட ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நான் தமிழர் கூட்டணியில் கூட்டுச்சேர்ந்துள்ளவனுகயிருப்பதால் அச்செய்தி சில வாசகர்களிடத்தில் என்னைப்பற்றித் தவருன ஓர் எண்ணத்தைத்தோற்றுவித்திருக்கலாமென நான் கருதக் கூடியதாயிருக்கிறது.

எனவே நான் தமிழர் கூட்டுமுன்னணியில் கூட்டுச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் இச்செய்தியின் தொடர்பாக எனது சொந்தக்கருத்தை இங்கு வெளியிட வேண்டியவனுகயிருக்கிறேன்.

தமிழர் கூட்டு முன்னணி இயற்கை நியதியின் தவிர்க்க முடியாத தூண்டுதலின அடித்தளத்தில் வேரூன்றிப் படிப்படியாக வளர்ந்துள்ள ஓர் இயக்கத்தின் அமைப்பாகும். எனவே முதலில் இதை ஓர் அரசியல் அமைப்பென்றே அழைக்க முடியாது.

இந்த நாட்டில் காலத்துக்குக்காலம் மாறி மாறி ஆட்சி பீடத்திலமர்ந்த அரசாங்கங்கள் தொடர்ந்து இங்குள்ள தமிழினத்தவரின் உரிமைகளைப்படிப்படியாக பலகோணங்களில் சிதைத்து வந்ததன் விளைவால் தமிழினத்தவர் இன்றையக் காலகட்டத்தில் எஞ்சியிருக்கும் தமது உரிமைகளைச் சுயமாகப் பாதுகாப்பதற்காகவும், இதுவரை இழந்து வந்துள்ள உரிமைகளைச்சுயமாக சட்டுவதற்காகவும் இயற்கை விதியின் தவிர்க்க முடியாத ஏவுதலால் ஒன்றுதிரண்டு ஐக்கியப்பட்டு நிற்கின்றுர்கள.

தமிழினத்தவர் இன்று தமக்கு இருக்கக் கூடிய உரிமைகளைப் பாதுகாப்பதிலும் இதுவரை படிப்படியாக இழந்து வந்த உரிமைகளைத் திரும்பப்பெறுவதிலும் இன்றையத் தமிழர் தனித்தனியாகவும்—தனிப்பட்ட பலர் சேர்ந்த குழுக்களாகவும் இயற்கையின் எழுதாக்கட்டளைக்கிசைய இயங்கி வருகிருர்கள்.

இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள அரசாங்கம் அடிப்படை மனித உரிமைகளுக்கு முரண்பட்ட முறையில் இங்கு வாழ்ந்து வரும் தமிழினத்தவரின் சம உரிமைகளைப் புறக்கணித்துப் பெரும்பான்மைப் பலத்தின் உதவியுடன் சமீப காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றிய இலங்கைக் குடியரசு அரசியலமைப்புச் சட்டமே இன்றிருக்கக்கூடிய தமிழர் கூட்டு முன்னணியை உருவாக்குவதற்குரிய சூழ் நிலையைப் பிறப்பித்தது.

இதற்குரிய பின்னணியை இங்கு நான் தெட்டத்தெளிவாக விளக்கிக்கூற விரும்புகிறேன்.

முற்காலத்தில் வாழ்ந்த தமிழினத்தவர் இலங்கையை ஆட்சி செய்து வந்திருக்கிருர்கள் என்பது மறைக்கவும் மறுக்கவும் முடியாத வரலாற்று உண்மை. இலங்கையில் அந்நியர் ஆட்சி நடைபெற்றபோது சிங்கள இனத்தவருக்கு இருந்த அதே உரிமைகளைத் தமிழினத்தவரும் சமமாக அனுபவித்து வந்திருக்கிருர்கள். இலங்கை அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற காலத்தில் கூட சிங்கள இனத்தவருக்கு இருந்த அதே உரிமைகளைத் தமிழினத் தவரும் சமமாக அனுபவித்து வந்திருக்கிருர்கள். இப்படி இருந்து வந்தவர்கள் ஏன் 1956ல் சிங்கள இனத்தவருக்கு இருந்த அதே உரிமைகளைப்போல் சம உரிமைகள் இல்லாதவர்களாகத் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டார்கள்? இதை அடுத்து 1970ல் ஏன் இன்னும் இதை விட மோசமான நிலையில் வைக்கப்பட்டிருக்கிருர்கள்? இதற்குரிய உண்மையான விடையைக் காணவேண்டிய இறுதிக்கட்டத்திற்கு இன்று தமிழினத்தவர்கள் தள்ளப்பட்டிருக்கிருர்கள். இந்த நிர்ப்பந்த நிலையின் பிரதிபலிப்பின் விளைவே தமிழர் கூட்டு முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது.

சில அரசியல் கட்சிகள் ஒருபொதுவான செயல் திட்டத்தின் கீழ் கூட்டுச் சேர்ந்து ஒன்ருகப் பிணைந்துள்ள அமைப்பின் வடிவமே இன்று ஆட்சி பீடத்தில் அமைந்துள்ள ஐக்கிய முன்னணியாகும். ஓரளவு இந்த ஐக்கிய முன்னணியின் அமைப்பைப் போன்றதே தமிழர் கூட்டு முன்னணியுமாகும்.

இந்த ஐக்கிய முன்னணி அமைப்பிலுள்ள கூட்டுக் கட்சிகள் பல்வேறுபட்ட விடயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தும் கூட இன்னும் ஐக்கிய முன்னணி அமைப்பில் இருந்துகொண்டே முக்கியமான விடயங்களில் ஒன்றிணைந்து ஒருமித்துச் செயல்பட்டு வருகின்றன. இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக ஐக்கிய முன்னணியில் கூட்டுச்சேர்ந்துள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சொல்லலாம்,

**நான் ஏன்**

**பங்கு பற்றினேன்.**

என்னைப் பொறுத்தவரையில் மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நான் ஏருவூர் வடக்கு மேற்குப்பிரதம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அழைக்கப்பட்டிருந்தேன்.

என்று நான் வழக்கறிஞராக எனது தொழிலை ஆரம்பித்தேனே அன்றிருந்து இன்று வரை நான் தொடர்ந்து கூட்டுறவுத் துறையில் சேவையாற்றிக் கொண்டிருக்கிறேன். இன்று நான் இலங்கையில் கூட்டுறவுத் துறையில் ஒரு முக்கியஸ்தனுகக் கணிக்கப்பட்டு வருகிறேன். அதுமட்டுமல்ல கடந்த ஏழு ஆண்டுகளாக அகில உலகக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு இலங்கையின் பிரதிநிதியாகச்சென்று செயலாற்றிவந்திருக்கிறேன் அத்துடன் மேற் குறிப்பிட்ட அகில உலகக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் உதவித் தலைவராகவும் பதவி வகித்துச் செயலாற்றியுள்ளேன்.

தனிப்பட்ட முறையில் கூட்டுறவுத்துறையில் இத்தகைய இடத்திற்கு உரியவனுய் இருந்தமையாலும் திரு. இலங்கரெத்தின கூட்டுறவுத்துறைக்குரிய அமைச்சராக இருந்தபடியாலும் அவரது வருகை கூட்டுறவு சம்பந்தமான வருகையாய் இருந்ததாலுமே நான் கடந்த 30ம் திகதி நடந்த நிகழ்ச்சிக்குச் சமூகம் கொடுக்க வேண்டியவனுயிருந்தேன்.

இறுதியாக இங்கு நான் அழுத்தம் திருத்தமாகக் கூறக்கூடியது நான் தமிழர் கூட்டு முன்னணியைப் பொறுத்தவரையில் எந்த வித அரசியல் ஆதாயத்தை விரும்பியும் இந்த முன்னணியில் கூட்டுச் சேர்ந்தவனல்ல. இந்த நாட்டில் வாழும் தமிழ் இனத்தவர் எந்த வகையிலும் இங்கு வாழக் கூடிய சிங்கள இனத்தவரிலும் தாழ்ந்த இரண்டாம் தரம் பிரஜைகளல்ல என்பதை நிலை நிறுத்தித் தமிழினத்தவரின் தன்மானத்தை பாதுகாக்கும் தூய கருத்துடனேயே தமிழர் கூட்டு முன்னணியில் கூட்டுச் சேர்ந்துள்ளேன் என்பதையும் இங்கு நான் யாவர்க்கும் பகிரங்கமாகக் கூற விரும்புகிறேன்.

—இவ்வாறு கல்குடா பா. உ. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

# செல்லத்தம்புவுக்குச் சவால் விடும் முகவரி இல்லாத சமதே! யார் நீ?

## 'புயலின்' புளுகு மூட்டைக்கு வவுனியாஇஸ்லாமியர்சாட்டை!

'செல்லத்தம்புவுக்குச் சவால்" என்ற தலைப்பில் அண்மையில் வெளிவந்த புயல் இதழைக் கண்டேன். வவுனியா வாழ் இஸ்லாமிய சமுதாயத்தின் இன்றைய நிலையை உணர முடியாத சமதவர்கள் போல் வாரின் தான்தோன்றித் தனமான செயல்களினுலேயே வவுனியா மாவட்ட முஸ்லீம் சமுதாயம் 100 வருட காலத் தேக்க நிலையில் இன்று தவித்துக்கொண்டிருக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

அதற்கு முன் திரு. செல்லத்தம்பு அவர்கட்கு சவால் விடுத்துள்ள இந்த சமத் யார்? ஊர் பெயர், முகவரி ஏதுமில்லாதவரா? நெஞ்சில் உறுதியிருந்தால், நேர்மைத் திறனிருந்தால், தான் யார், தன்னுடைய முகவரியென்ன என்பதையெல்லாம் இந்த சமத் கூறியிருக்கவல்லவா வேண்டும்? அதற்கு அஞ்சும் கோழைக்கு, சவால் விட என்ன அருகதையுண்டு?

வவுனியாத் தேர்தல் தொகுதியில் மிகச் சிறுபான்மை இனமாக கலை, கலாச்சார, பொருளாதார வீட்சியினுல் பாதிக்கப்பட்டவர்களாக இன்றுவரை வாழ்ந்து வரும் இஸ்லாமிய சமுதாய ஏழை மக்கள் தற்போது சமதவர்கள் எழுப்பிய புயலால் மேலும் பாதிக்கப்படுவார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

வவுனியா வாழ் இஸ்லாமிய சமுதாய அடிமைத்தளையை அகற்றவேண்டும் என்ற பரந்த நோக்குக் கொண்ட வவுனியா பாராளுமன்ற உறுப்பினருக்குசவால் விடும் சமதவர்கள் வவுனியா இஸ்லாமிய சமுதாய... அமைக்கும் ஓர் பகிரங்கக் கூட்டத்திலே இச்சவாலை திரு. செல்லத்தம்புவின்முன் கூற முன் வருவாரா?

புயல் இதழ் மூலம் புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டால் வவுனியா மாவட்ட இஸ்லாமிய மக்கள் அதை ஏற்றுக்கொள்ளும் மரமண்டை மனிதர்கள் என எண்ணியுள்ள சமதவர்களின் அறியாமைக்காக நான் வெட்கமடைகின்றேன். நியாயத்துக்காகவும் — நீதிக்காகவும் — உரிமைக்குரல் எழுப்பி உண்மையான இஸ்லாமியப் பற்றுடன்சமுதாய சேவையாற்றும் ஒருசில உத்தமர்களை நாம் வவுனியாவுக்கு ஈன்று கொடுத்துள்ளோம் என்பதை இஸ்லாமிய மாதர் இனம் சார்பாக சமதவர்கட்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே வவுனியா இஸ்லாமிய சமுதாயத்தின் 99 வீதத்தினர் திரு. செல்லத்தம்புவை எதிர்த்து வாக்களித்தார்கள். அப்படி இருந்தும் இஸ்லாமிய சமுதாய மக்களின் அறியாமைக்காக அவர்களைப் பழிவாங்காது அவர்களின் உரிமைக் குரலுக்கு மதிப்பளித்து தன்மானமுடன் வாழவழி வகுத்துக்கொடுத்தவர் உயர் திரு செல்லத்தம்பு என்பதை இஸ்லாமிய சமுதாய மக்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட இஸ்லாமிய சமுதாயத்தின் மின்... [illegible] ...முள்ள வவனியா இஸ்லாமிய இலட்சியவாதிகளின் உள்ளத்திலே கனவுபோல் காட்சிதந்த வவுனியா நகர முஸ்லிம் மகாவித்தியாலயம் நீராவிப்பிட்டி முஸ்லிம் கிராமசேவையாளர் தண்ணீரூற்று முஸ்லீம் மகாவித்தியாலயம் ஆகிய உரிமைக் குரல்களுக்கு உரிய மதிப்பளித்து உருவமும் பெற்றுத்தந்தவனின் உயரிய பண்புக்குப் பரணிபாட வேண்டிய நாம — உமது சவாலைக்கண்டு நகைக்கின்ளுேம்.

இலங்கைத்தீவின் நாலா பக்கங்களிலும் சகல வசதிகளையும் கொண்டோராய் வாழும் நமது இஸ்லாமிய சமுதாய பெரியார்கட்கு வவுனியா இஸ்லாமிய சமுதாயத்தின் பரிதாப நிலை எங்கே தெரியப் போகின்றது.

ஆயிரம் வருடங்கள் சென்றாலும் ஓர் இஸ்லாமியனைப் பாராளுமன்ற உறுப்பினராகப் பெற்றுக்கொள்ள முடியாத சிறுபான்மையினராகிய நாம், நமது கோரிக்கைகட்கு மதிப்புக்கொடுத்து நமது சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு றுதுணை புரியும் செல்லத்தம்புவுக்கு எமது நன்றிக்கடனைச் செலுத்துவதில் தவறேதும் இல்லையல்லவா?

திரு. செல்லத்தம்புவின் சேவையை மதிப்பீடுசெய்ய விரும்பும் சமதவர்கள் இஸ்லாமிய சேவை ஒன்றுக்காக உயர் திரு. செல்லத்தம்புவை நேருக்குநேர் சந்தித்தால் தன் அபிப்பிராயத்தை மாற்றி மன்னிப்புக்கோர வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் கூறிவைக்கவிரும்புகின்றேன்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவுகள் செல்லத தம்புவின் சேவையை சமதவர்கட்கு எடுத்துக்காட்டும் போது — அந்த வெற்றி விழாவிலே கண்டிப்பாக வவனியா மாவட்ட முஸ்லீம்கள் பின்தங்கிவிடமாட்டார்கள் என்பதையும் கூறிவைக்க விருப்புகின்றேன்.

ஜுனைத்தா இஸ்மாயில்

வாட் இல: 11, வவுனியா

## விநோதனுக்கு ஒரு சவால்

''விநோதன் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவரான செய்தியைப் பார்த்து உடுவில் இளைஞர்களான நாம் வெட்கப்படுகிருேம்.

''விவேகமற்ற விநோதனே! 55 சிங்களவர்களின் உதவியுடன் நீ உணர்வுள்ள ஒரு தமிழனைத் தோற்கடித்து விட்டதாகப் பெருமைப்படாதே. 5555 சிங்களவர்களை குடியேற்றி யாவது உடுவில் தர்மரை வெல்ல உன்னுல் முடியுமா?

''நீ மட்டுமல்ல, நாங்களுங் கூடத்தான் அடுத்த தேர்தலை ஆவலுடன் எதிர்பார்த்துக்காத்திருக்கிருேம். நீ சட்டம்- சரிவரப் படிக்கிருயோ இல்லையோ, உடுவில் தமிழர்களிடம் மறக்க முடியாத பாடம் படிக்கப் போவது மட்டும் நிச்சயம்!

—இவ்வாறு உடுவில் தொகுதி இளைஞர்கள் விநோதனுக்கு சவால் விட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியமைச்சருக்கு ஒரு கடிதம்!

அன்புள்ள ஐயா,

தமிழ் மக்களின் உரிமைகளைத்தாரை வார்த்து— அவர்களை இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரசைகளாக்கும் கைங்கரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும் தங்களுக்கு ஒரு சின்னக் கடிதத்தை எழுத விரும்புகிறேன்:

நீங்கள் எப்படித்தான் அரசாங்கத்தில் ஒட்டி உறவாடியிருந்தாலும், உங்களுக்கும் தெரியாமல் தமிழ் மக்களின் உரிமைகளை உங்களைக் கொண்டே குழிதோண்டிப்புதைக்கும் செயல்கள் இன்று நேற்றல்ல என்றோ தொடக்கம் நடைபெற்று வருகின்றது. தமிழ் மாணவர்களின் ஜீவாதார உரிமையை குற்றுயிராக குறையுயிராகக் கொலை செய்து விட தரம்பிரித்தலைக்கொண்டு வந்தீர்கள். பின்னர் அதனைத் தாங்கள் கைவிடுவதாகக் கூறியும் அது பகிரங்கமாக இல்லாவிட்டாலும், இரகசியமாக உங்கள் அனுசரணையுடனேயே நடைபெற்று வருகின்றது. இதனால் திறமைக்கு மதிப்பளிக்கத் தாங்களும், தங்கள் அம்மையார் அரசாங்கமும் தவறி விட்டார்கள்.

இப்பொழுது நீங்கள் வலுநைசாக ஒரு காரியத்தைச் செய்து வடமாகாண மாணவர்களின் உயர் கல்வியில் மண்ணைஅள்ளிப்போட்டு விட்டீர்கள். பட்டதாரிகளும் கிராமப்புறத்தில் பணியாற்றவேண்டும் என்று வலுபகட்டாகக் கூறி தமிழ் மக்கள் கல்வியில் கத்தி வைத்து விட்டீர்கள். பல ஆண்டுகள் வடமாகாணத்தில் கற்பித்த ஆசிரியர்கள் வெளிமாகாணங்களில் சேவையாற்ற வேண்டும் என்ற கொள்கையில் பிடிப்புள்ளவன் நான். அதனை என்றும் ஆதரிப்பவன்.

ஆனல் நீங்கள் பசுத்தோல் போர்த்த புலியாக இந்தக் கபட நாடகத்தை ஆடி முடித்திருப்பதை சிந்திப்பவர்கள், சீர் தூக்கிப் பார்ப்பவர்கள் பொறுத்திருக்கமாட்டார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் பத்தாண்டுகள் சேவை செய்தோர் இடமாற்றம் பெறவேண்டுமென்று தாங்கள் விடாப்பிடியாக நின்றதன் உள்ளாந்தரம் புரியாமல் பலர் உங்கள் தாளத்திற்கு ஆடி முடித்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளில், சிலவற்றில் ஒரே நேரத்தில் பத்து பட்டதாரி ஆசிரியர்களும் மாற்றப்பட்டனர். சராசரி ஒரு கல்லூரிக்கு மூன்றுக்கு மேற்பட்டோர் இடமாற்றம் பெற்றுள்ளனர். அவர்கள் வெளிமாகாணங்களுக்கு வந்து தான் என்ன செய்கிறார்கள். அவர்களிற் சிலர் நியமனம் பெற்ற பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களாக இருக்கிறார்கள். பலர் நியமனம் பெற்ற பாடசாலைகளில் எட்டாம் வகுப்பு வரைதான் இருக்கின்றது. அவர்கள் வருகையின் பின்னர் தான் மேல் வகுப்புகளையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். இன்னும் சிலர் நியமனம் பெற்ற பாடசாலைகளில் நியமனமாகிய ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்குரிய வகுப்புக்கள் இல்லாமல் திண்டாட்டப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் தங்கள் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. அதாவது மாற்றம் பெற்ற பட்டதாரிகளின் இடங்கள் நிரப்பப்படவில்லை. அவர்களிடங்களுக்கு நியமனம் பெற வெளி மாவட்டங்களில் தகுதியுடைய பட்டதாரி ஆசிரியர்களை இன்னும் தங்கள் திருக்கூட்டத்தினர் கண்டுபிடிக்கவில்லை. பட்டதாரிகளின் இடங்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சிலர்தான் நியமனம் பெற்றுள்ளனர். இதனல் தாங்கள் போட்ட திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. இதனல் இனிமேல் தரம்பிரிக்கவேண்டிய அவசியம் தங்களுக்கு ஏற்படாது. யாழ்ப்பாண மாணவர் தாங்கள் இதுவரை பெற்ற கல்வியை இனிப்பெறமுடியாது தந்திரமாகத் தடுத்து விட்டீர்கள். இதுபற்றி இதுவரை எவரும் வாய்திறக்கவில்லை, தொழிற்சங்கங்களும் தூங்கி வழிகின்றன.

தங்கள் தந்திரம் சரியாக யாழ்ப்பாண மாணவர் விஷயத்தில் வேலைசெய்வதையிட்டுத் தாங்கள் நிம்மதியடைவீர்கள். தங்களுக்கு யாழ்ப்பாண மாணவர்கள் கொடும்பாவி காட்டி எரித்ததற்கும் பொறுத்திருந்து தக்கபாடம் படிப்பித்து விட்டீர்கள். தாங்கள் பலே கெட்டிக்காரர்தான்.

தங்களைப்பற்றி தாங்கள் முன்னர் அதிபராக இருந்த கல்லூரி தேர்தல் தொகுதி எம். பி. தாழ்வாகச் சொன்னபோதும், தாங்கள் இனிவேண்டியதில்லை என்று பகிரங்கமாகப் பேசிய போதும் தான் மனம் வருந்தினேன். அந்த மன வருத்தம் ஏன் ஏற்பட்டதென்ருல் தங்கள் மேல் எனக்கேற்பட்ட அனுதாபத்தால் அல்ல. தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் அரசாங்கத்தில் அட்டைபோல் ஒட்டியிருக்கும் தங்களை அவர்களே உதைத்துத் தள்ள முற்பட்டு விட்டார்களே என்ற மனவருத்தம் தான். இன்னும் எத்தனை காலத்திற்குத் தாங்கள் கல்வி அமைச்சராக இருக்கிறீர்களோ அத்தனை காலமும் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல சிங்கள மக்களுக்கும் பெரும் தலையிடிதான்.

தாங்கள் தமிழ் மாணவருக்கு குழிபறிக்க சிங்களத் தலைவர்கள் தங்களுக்குக் குழிவெட்ட ஆரம்பித்துள்ளார்கள், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதற்கோர் உதாரண புருடராகத் தாங்கள் விளங்குகிறீர்கள்.

தாங்கள் பல காலம் நோய் வாய்ப்பட்டு இப்போது அலுவல்களைக் கவனித்து வருகிறீர்கள். தாங்கள் அரசாங்கத்திலிருந்து உதைத்துத் தள்ளு முன், தாங்கள் உடல் நலக்குறைவால் றிடயர் ஆவதாகக் கூறி ஒய்வெடுத்தால் மிச்சம் நல்ல காரியமாக அது இருக்கும். அப்படி ஒய்வெடுக்கு முன் பட்டதாரிகளை இப்படி மாற்றி யாழ் தமிழ் பிள்ளைகளின் கல்வியில் நஞ்சு கலந்ததை, நயவஞ்சகத்தை புனராலோசனை செய்து அவர்கள் கல்வியில் உயர்வடைய வழி வகுப்பீர்களென எதிர்பார்க்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
அப்பலோ.

# சமூகப் பணிகளுக்கு கலையை அர்ப்பணிக்கும் தர்மலிங்கம் சகோதரிகள்!

பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மட கட்டட நிதிக்காக தர்மலிங்கம் சகோதரிகளின் நாட்டிய நிகழ்ச்சிகள், வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

இத்தாலியிலிருந்து இலங்கை வந்துள்ள திருக்குடும்பக் கன்னியர் குழாதிதின் தலைவி வண. சகோதரிமேரிபோல், இந்து கலை, கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நடனநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்பினை, இச்சந்தர்ப்பத்தில் தர்மலிங்கம் சகோதரிகள் அளித்தனர்.

சந்திரகலா, சூர்யகலா, சசிகலா தர்மலிங்கம் சகோதரிகள் பரதநாட்டியத்தில் மாத்திரமல்ல மணிப்புரி, மோகினி ஆட்டம், கதகளி, குறத்தி நடனம் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கியதை அன்றைய நடன நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின.

ஆனந்த நடனமிடும் ஆனந்த நடேசரின் அடிபணிந்து நடனநிகழ்ச்சியை ஆரம்பித்த தர்மலிங்கம் சகோதரிகள், அலாரிப்பு, ஜதீஸ்வரம், வர்ணம், தில்லானு ஆகிய நடனங்களைத்தொடர்ந்து மணிப்புரி, கதகளி, மோகினி ஆட்டம், குறத்தி நடனம் ஆகியவற்றில் தமது திறமையைக் காட்டி சபையோரின் கரகோஷத்தைப் பெற்றனர்.

இறுதிக் கட்டத்தில் அமைந்த சிவன்-பார்வதி நடனம், வெளிநாட்டு விருந்தினர்களை மாத்திரமல்ல இங்குள்ளோரையும் மெய்சிலிர்க்கவைத்தது. சிவன்-பார்வதி நடனத்துக்காக அமைக்கப்பட்ட திருக்கைலாசக் காட்சியும், புகைமண்டலமும் தெய்வீகத்தை நினைவுறுத்த, அதன் பின்னணியில் அமைந்த நடனம் மிகவும் அற்புதமாக அமைந்திருந்தது.

''பரத நாட்டியத்தின் தத்துவத்தை நான் படித்தறிய ஆவலாயுள்ளேன்; நடனக்கலையில் முன்னேறி வரும் தர்மலிங்கம் சகோதரிகளுக்கு என் பாராட்டுக்கள்'' என வண; சகோதரி மேரி போல் பாராட்டுத் தெரிவித்தார்.

அளவெட்டி சிவனிர்க் கழகத்தில் நடனப் பயிற்சியை ஆரம்பித்த சூர்யகலாவும், சந்திரகலாவும் பின்னர் இந்திய நாட்டிய மேதை திரு. சி. கோபாலகிருஷ்ணன், திருமதி குசும் கோபாலகிருஷ்ணனிடமும், திரு. பீ. ஜி. செல்லப்பாவிடமும் நடனப் பயிற்சி பெற்றனர். சென்றவருடம் இவர்களின் நடன அரங்கேற்றம் கொழும்பு நவரங்கசலா மண்டபத்தில் நடைபெற்றது.

செல்விசசிகலா, பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையின் மாணவியாவார். திருமதி கமலா ஜெயதிலகாவிடம் நடனம் பயின்று வருகிறார்.

சமய, சமூக பேதமின்றி சேவை மனப்பான்மையுடன் கன்னியர் மட கட்டட நிதிக்கு உதவமுன்வந்த திரு. தர்மலிங்கம் தம்பதிகளுக்கு திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைத் தலைவி சகோதரி எம். ஹெலன் ஆகியோர் பாராட்டுத்தெரிவித்தனர். பாடசாலை மாணவிகளும் திரு. தர்மலிங்கம் தம்பதிகளையும், நடனவிருந்தளித்த சகோதரிகளையும் கௌரவித்தனர்.

திருமதி அம்பிகா தாமோதரம் நட்டுவாங்கம் செய்து நிகழ்ச்சிக்கு மெருகூட்டினர்; செல்வி அருந்ததி சுப்பிரமணியம், செல்வி இந்திராணி பாலசிங்கம் ஆகியோர் பாடல்களை இசைத்தனர். வித்துவான் ஏ. சந்தானகிருஷ்ணன் (மிருதங்கம்), ஈழநல்லூர் ரி. வி. பிச்சையப்பா (வயலின்), திரு. வெள்ளைச்சாமி (கிளாரினட்) செல்வி கே. சதாசிவம் (புல்லாங்குழல்), திரு. கே. கே. அச்சுதன் (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வாசித்தனர்.

அளவெட்டியில் ஆரம்பித்த கலைப்பணியை, சமூகப் பணிக்கு அர்ப்பணிக்கும் சூர்யகலா, சந்திரகலா, சசிகலா சகோதரிகள், ஜாஎல பிறிலங்கா இண்டஸ்ரீஸ் உரிமையாளர் திரு. கே. தர்மலிங்கம் தம்பதிகளின் புத்திரிகளாவர்.

— துரைமன்னன்.

'நாயினும் கீழாய்
செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓய்தல் இன்றி
அவர் நலம் பேணி
உழைத்திட நான்
தவறேன்'
—பாரதிதாசன்.

# கேள்விகேட்ட ஆசிரியர் மீது வி. பொன்னம்பலம் 'நக்கல்'

## ஆசிரிய கலாசாலையில் சின்னத்தனம்!

25-1-73ல் வடபகுதிக்கு ரஷ்யாவில் இருந்துவந்த கல்விநிபுணர் ஒருவர் வருகை தந்தார். அவரின் சுற்றுலா ஒழுங்குகளை வட பகுதி கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வ. பொன்னம்பலம் ஒழுங்கு செய்திருந்தார். இந்த ஒழுங்கின்படி கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரியும் அடங்கியிருந்தது. ரஷ்ய கல்வி நிபுணருக்கும், அவருடைய சகாக்களுக்கும் நண்பகல் போசனமும் அங்குதான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது;

கல்வி நிபுணர் திரு. வ. பொ. சகிதம் வந்தார். நிபுணரின் சொற்பொழிவு ஆரம்பமாகியது. நிபுணர் ரஷ்யமொழியில்பேச அந்தப் பேச்சை சிங்கள வாலிபர் ஒருவர் திரு. வ. பொ. வுக்கு மொழிபெயர்க்க திரு. வ. பொ. அதைத் தமிழில் மொழிபெயர்த்தார். ''மொத்தமாக மொழிபெயர்ப்பின் சாரம் கம்யூனிசம் வந்தால்தான் அத்தகைய உயர்வான கல்விக் கோட்பாடு ஏற்படமுடியும்'' என்பதுதான்.

இறுதியில் ஆசிரிய மாணவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள். பதில்களும் விடயத்தை விடுத்து வெளி வந்தன. கடைசியாக ஒரு ஆசிரிய மாணவர் எழுந்து ''செக்கோசெலவே[illegible]விலும் இத்தகைய கல்வி அமைப்பு உள்ளதா'' என்று கேட்டார். (இந்த ஆசிரிய மாணவர் வடகிழக்கு மாநிலத்தைச் சேராதவர்)

அந்த ஆசிரிய மாணவர் கேட்டது உண்மையில் ரஷ்யாவின் ஆதிக்கம் உள்ள நாடுகளிலும் இத்தகைய கல்வி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா, அல்லது அந்த நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? என்பதை அறிவதற்கேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் திரு. வ. பொ. தனது சின்னத்தனத்தை, மனச்சாட்சிக்குப் புறம்பான தனது அரசியல் போக்கை வெளிப்படுத்தினர்.

உடனே திரு. வ. பொ. கூறினர் ''உம்முடைய இந்த நக்கல் கேள்வியை வேறு இடத்தில் கேட்கவேண்டும்'' என்று.

தான் உட்கார்ந்திருந்தது ஒரு ஆசிரிய கல்லூரியின் மேடை என்பதையும, தனக்குமுன்னல் உட்கார்ந்திருந்தவர்கள் ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் என்பதை அவரின் தலைக்கனம் மறைத்துவிட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. பல ஆசிரிய [illegible] காணப்பட்டார்கள்.

எனினும் வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பிரமுகர் முன்னிலையில் இத்தகைய கேவலத்தை அதிலும் ஒரு ஆசிரிய கல்லூரியில் ஏற்படுத்தக்கூடாது என்று மிக்க சிரமத்தின்பேரில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள்.

தவிரவும், சில சில காரணங்களைவைத்துக்கொண்டு, அரசாங்க சார்பு அடிவருடிகளை அழைத்து தங்களின் துதிபாடும் தேவாரங்களை விளம்பரப்படுத்த கல்லூரி இடம் கொடுக்குமானல், ஏன் தமிழர் கூட்டணியினரையும் அழைத்துஒவ்வொரு சொற்பொழிவைக் கேட்கக்கூடாது? என்ற சர்ச்சையும் ஆசிரிய மாணவர் மத்தியில் பரவலாக எழுந்து நின்றது.

நன்றியுரை கூறிய ஆசிரிய மாணவர், திரு. வ. பொ. தனது குருநாதர் என்றும், ஏழைகளின் மக்கள் திலகம் என்றும், எனக்கும் என் போன்ற உங்களுக்கும் வழிகாட்டக்கூடியவர்'' என்று குறிப்பிட்டார். இப்படி எல்லாம் ஒரு ஆசிரிய கல்லூரி மேடையில் பேசுவது அனுமதிக்கப்பட்டுள்ளதா? இது சின்னத்தனமாகாதா? பண்புடன்பேசத் தெரியாதவர்கள் மக்கள் தலைவர்களாக வரமுயற்சிக்கிறார்கள்... முட்டாள்தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் கொஞ்சம் சரித்திரம் படிக்கோம்
ராஜா ராணி நம்மைப்போல் இல்லை
தானே பார்த்து தானே ரசித்து
தானே புகழ்ந்தால் தாங்காது தாயே
சினிமா உலகை வாழவிடப்பா
என்னே பூர்வ ஜென்மம்

6 வது வாரம்

சேரன், சோழன் திரும்பவும் வருவான்
காதல் சோகம் கல்யாணமெல்லாம்
அங்கே பேசு எம்மிடம் வேண்டாம்
நானே கரும்பு நீயோ எறும்பு
அண்ணே! இது ஒரு நகைச்சுவை சித்திரம்

# செல்லமகால்

(ஈஸ்ட்மன் கலர்)

ரவிச்சந்திரன்-காஞ்சனா,
நாகேஷ் ரமாபிரபா,
மூர்த்தி மாலி
விஜயசந்திரிகா நடித்த-
சித்திராலயாவின்



# உத்தரவின்றி உள்ளே வா

## 6 - வது ஜனத்திரள் வாரம்!



கெபிட்டல் பிளாசா
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,
பாலாஜி, சாந்தகுமாரி, நாகேஷ், பண்டரிபாய், சுந்தரராஜன்,
—நடித்த—
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்

# வசந்தமாளிகை (ஈஸ்ட்மென் கலர்)

கடைசி 4 நாட்கள் பார்க்கத் தவறாதீர்கள்

## சென்ட்ரல் திரையில்

சிவாஜி — ஜெயலலிதா
— நடித்த —

# பட்டிக்காடா பட்டணமா

## 22ம் திகதி முதல்

சென்னையில் 100 நாட்களுக்கு
மேல் ஓடிய திரையோவியம்!

சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, வீ. கே. ராமசாமி,
மனோரமா, நடித்த

# ஞான ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை
194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் பெப்ருவரி மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது